வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 16.01.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 16 | பக்கங்கள் : 12

# இலங்கையில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயத்தை வழங்குங்கள்!

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை

லண்டன், ஜனவரி 16

இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கான சுயநிர்ணயத்தை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளதாக தொழிற்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஷிபோர்ன் மெக்டொனாக் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கவும் இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென ஷிபோர்ன் மெக்டொனாக் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் நண்பன் என கூறுவதில் நான் பெருமை கொள்கிறேன். இந்த தைத்திருநாளில் இங்குள்ள மக்களுக்காகவும்

11

# கொழும்பு, யாழ்ப்பாணம் மன்னாரில் காற்று மாசு!

கொழும்பு, ஜன. 16

இந்நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் காற்றில் தூசு துகள்களின் செறிவு அதிகரித்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் வளி மாசுபாட்டு தரக்குறியீடு கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப்பேச்சாளர் அஜித் வீரசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் பத்தரமுல்லை மற்றும் கொழும்பு கோட்டையை அண்மித்த பகுதிகளில் வளி மாசுபாட்டு தரக்குறியீடு 105 புள்ளிகளாகவும், யாழ்ப்பணத்தில் 100 புள்ளிகளாகவும் அதிகரித்துள்ளது. (அ)

# ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க. வேட்பாளர்!

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜன. 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர். பொதுஜன பெரமுன சார்பில் வேட்பாளர் போட்டியிடலாம் அல்லது போட்டியிடாமல் இருக்கலாம் என பொதுஜன பெரமுனவின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் ரீதியில் நாங்கள்

11



■யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று நடந்த பொங்கல் விழாவில் கலந்து கொண்டபோது...! (அ)

# டிரான் அலஸுக்கு மிரட்டல்

கொழும்பு, ஜன. 16

குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை இலக்கு வைத்து நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய நடவடிக்கையினை நிறுத்துமாறு கோரி தமக்கு அச்சுறுத்தல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்த கடிதம் கடந்த வியாழன் அன்று பொது பாதுகாப்பு அமைச்சுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த அச்சுறுத்தல் கடிதம் இந்த நாட்டில் உள்ள ஒருவரால் தபாலில் அனுப்பப்பட்டுள்ளது, எத்தகைய அச்சுறுத்தல்கள் வந்தாலும் தனது பணியை நிறுத்தப் போவதில்லை என்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார்.

அவிசாவளை பகுதியில் இடம்பெற்ற

11

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேசிய நல்லிணக்கம் முக்கியம்!

## யாழ்ப்பாணத்தில் கூறினார் நீதி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 16

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தேசிய நல்லிணக்கம் முக்கியமானது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்கள் விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ நேற்று யாழ் ஆரியகுளம் நாக விகாரையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்பொழுது நாட்டில் சுமுகமான நிலை காணப்படுகின்றது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும்



இக்கட்டான காலத்தில் நாட்டினை பொறுப்பெடுத்து நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குரிய வேலைத் திட்டங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளார்.

அதன் காரணமாக தற்பொழுது நாட்டில் சுமுகமான நிலை காணப்படுகின்றது. எனினும், நாட்டில் மேலும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் மற்றும் மதங்களுக்கு இடையே நல்லிணக்கம் ஏற்படுமிடத்து நாட்டினை மேலும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்-என்றார்.

யாழ்ப்பாணம் நாகவிகாரையில் தேசிய

11

# ‘யுக்திய’வால் மனித உரிமை மீறல்கள் உயர்வு

கொழும்பு, ஜன. 16

இலங்கையில் போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகள் கடுமையாக உக்கிரமடைந்து கணிசமான மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுத்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச சட்ட நிபுணர்கள் ஆணைக்குழு உட்பட 30இற்கும் மேற்பட்ட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு,

2023 டிசெம்பர் 17 ஆம் திகதி பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொது பாதுகாப்பு

11

# அநுரகுமார ஜனாதிபதியானதும் பெண் ஒருவருக்கே பிரதமர் பதவி

கொழும்பு, ஜன. 16

தேசிய மக்கள் படையின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானதன் பின்னர் பெண் ஒருவர் பிரதமராக

**விஜித ஹேரத் உறுதி**

நியமிக்கப்படுவார் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம்

11

# அற்புதமான பங்களிப்பை வழங்கிய தமிழருக்கு மனமார்ந்த நன்றிகள்!

## பிரித்தானிய பிரதமரின் பொங்கல் வாழ்த்து

லண்டன், ஜன. 16

பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் நாட்டுக்கு வழங்கியுள்ள அற்புதமான பங்களிப்பை பாராட்டியுள்ள அந்நாட்டு பிரதமர் ரிஷி சுனக், தமிழர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு



அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

கல்வி,

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி ஐயா ஒரு தடவை தனது கட்சியின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்துக்கு தனது நண்பர்கள், தன்மீது அபிமானம் கொண்டவர்கள் என்று பலரையும் அழைத்திருந்தார். அவர்களிடம், கட்சியை எப்படி கொண்டுநடத்துவது என்று ஆலோசனை கேட்கவே அழைத்திருந்தார்.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஈழநாடு- டான் குழுமத் தலைவர் பேசியது இப்போதும் ஞாபகத்தில் உண்டு.

கூட்டத்தின் ஆரம்பத்தில் பேசிய சங்கரி ஐயா, 'நான் விக்னேஸ்வரனையும் முன்னர் ஒரு தடவை வாருங்கள் கட்சித் தலைமைப் பதவியை தருகின்றேன் என்றேன். அவர் வரவில்லை. இப்போதும் சொல்கிறேன். பொருத்தமானவரை சொல்லுங்கள் கட்சித் தலைமையை வழங்குகின்றேன்.' என்றார்.

இதற்கு பதிலளித்த குகநாதன், 'இது என்ன? உங்கள் கொம்பனியா? அதாவது தனியார் நிறுவனமா? வாருங்கள் தலைமைப் பதவியைத் தருகின்றேன் என்று சொல்வதற்கு? கட்சி மாநாட்டைக் கூட்டுங்கள். தலைவர் பதவிக்கு யார் பெயர் முன்மொழியப்படுகின்றதோ அவர் பொருத்தமானவர் என்று பொதுச் சபையில் உள்ள உறுப்பினர்கள் நினைத்தால், அவர்கள் அவரை தெரிவுசெய்வார்கள். அது இந்த குகநாதனாகவும் இருக்கலாம்...' என்றார்.

இது ஏன் இப்போது ஞாபகம் வருகின்றது என்று நீங்கள் கேட்கலாம். அந்தச் செய்தியைப் படித்தபோதுதான் அது ஞாபகத்துக்கு வந்தது.

தமிழரசு கட்சியின் தலைவர் பதவியை தேர்தல் இல்லாமல் நடத்துவதற்காக, அந்தப் பதவிக்கு போட்டியிடும் மூன்று பேரும் ஒன்றாக சந்தித்து பேசியது தொடர்பான செய்தி ஒன்றை நண்பர் ஒருவர் பகிர்ந்திருந்தார்.

அந்தச் செய்தியில், போட்டியாளர்கள் இருவரும் பேசிய விடயங்கள் செய்தியாக்கப் பட்டிருந்தன.

'தலைமைப் பதவியை தனக்கு விட்டுத்தந்துவிட்டு கட்சியின் தேசிய அமைப்பாளராகுங்கள்' என்று சிறீதரனிடம் சுமந்திரன் கோரிக்கை விடுத்தாரெனவும், 'முன்னர் தனக்குத் தந்த வாக்குறுதிப்படி தலைமைப் போட்டியிலிருந்து நீங்கள் விலகுங்கள்' என்று சுமந்திரனிடம் சிறீதரன் கோரிக்கை விடுத்தாரெனவும் அந்தச் செய்தி தகவல் தந்தது.

முதலில் இந்தச் செய்தியை வெளியே சொன்னவர்கள் அந்த வேட்பாளர்கள் மூவரில் ஒருவராகத்தான் இருக்கமுடியும். அதுகூட ஒரு தலைமைப் பண்புதானா என்பது தெரியவில்லை. பேச்சு முடிந்த பின்னர், இந்த ஊர்க்குருவி அவர்கள் மூவரில் ஒருவரோடு தொடர்புகொண்டபோது, அவர் சொன்னார், 'அவர் என்னை போட்டியிலிருந்து விலகச் சொன்னார். நான் விலகத் தயாராக இல்லை என்றேன். அப்போது 'தேர்தல் களத்தில் சந்திப்போம்' என்று முடிவாகியது என்றார்.

அங்கே இடம்பெற்ற சம்பாசனைகளை விலாவாரியாக கேட்பது அழகாக இருக்காது என்பதால் அதனோடு தவிர்த்துக்கொண்டேன். ஆனால், இருவரும் தங்களுக்குள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதை இப்போது அந்தச் செய்தியில் தெரிந்துகொள்ள முடிந்தது.

ஆக, 'நீங்கள் போட்டியிருந்து விலகிக்கொள்ளுங்கள். தேசிய அமைப்பாளராகுங்கள்' என்று சுமந்திரன் சொன்னார் என்ற செய்தியைப் படித்தபோதுதான் சங்கரியின் மேலே குறிப்பிட்ட கூட்டம் ஞாபகத்துக்கு வந்தது.

தமிழரசு கட்சியில் தேசிய அமைப்பாளர் என்ற பதவி ஒன்று இதுவரை இல்லை. அப்படியொரு பதவியை உருவாக்குவதெனில் அது பொதுச்சபை கூடி முடிவெடுத்து அது அவர்கள் யாப்பில் சேர்க்கப்படவேண்டும். அப்படிச் சேர்த்தாலும் அது தலைவரால் நியமனம் செய்யப்படும் என்றும் முடிவெடுக்கப்படவேண்டும். அப்படியெனில் மாத்திரமே போட்டியிலிருந்து விலகுங்கள். தேசிய அமைப்பாளராகுங்கள் என்று ஒரு தலைவர் கூறலாம்.

அதுவல்ல, இன்று நாம் இங்கே முக்கியமாகச் சொல்ல வருவது.

முன்னர் தனக்குத் தந்த வாக்குறுதிப்படி தலைமை போட்டியிலிருந்து விலகுங்கள் என்று சுமந்திரனிடம் சிறீதரன் கோரிக்கை விடுத்தாரெனக் கூறப்படுவதே இங்கு கவனத்துக்குரியது. அப்படி ஒரு வாக்குறுதியை அவர் வழங்கியிருந்தால், அந்த வாக்குறுதியை வழங்கியபோது இருந்த நிலைமைக்கும் இப்போது இருக்கும் நிலைமைக்கும் இடையே என்ன வேறுபாடு என்பது தெரியவில்லை.

ஆனால், ஒரு காலத்தில் சிறீதரனின் தலைமையின் கீழ் பணியாற்ற அவர் தயாராக இருந்திருக்கிறார் என்பது மாத்திரம் தெரிகின்றது.



ஒரு காலத்தில் (அதாவது அப்படி உறுதி வழங்கியபோது) எப்படியான நிலைமை கட்சிக்குள் இருந்தது என்பது பற்றியும் அல்லது அப்போது தலைவராகக் கூடிய தகுதியும் ஆற்றலும் ஆளுமையும் அவருக்கு இருந்தன என்று அவர் ஏற்றுக்கொண்டிருப்பது பற்றியும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கின்றது.

ஆனால், எந்தச் சந்தர்ப்பத்தில் அவர் இவருக்கு இத்தகைய வாக்குறுதியை வழங்கினார் என்பது பற்றி சிறீதரன் பொதுவெளியில் பேசவேண்டும். அப்போதுதான்- இப்போது அந்த நிலைமை இல்லை என்பதையும் தமிழ் மக்கள் புரிந்துகொள்வார்கள்.

**- ஊர்க்குருவி.**



## வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவில்...!


படங்கள் - லி. ஜெகன்






Eelanadu ஈழநாடு
16.01.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், தை 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எத்தனை தை பிறந்தாலும்...?

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது ஒரு தமிழ் நம்பிக்கை. இந்த நம்பிக்கை நமது அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு பொருந்துமா? பொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு - இப்படியான கதைகள் தமிழ் மக்களுக்குப் புதிதல்ல. ஆனால், இதனைக் கூறும் அரசியல்வாதிகளும் வெட்கப்படுவதில்லை - அவ்வாறானவர்களுக்கு வாக்களிக்கும் மக்களும் வெட்கப்படுவதில்லை. 2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியலின் நாட்கள் இவ்வாறுதான் நகர்ந்திருக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில்தான் இலங்கை தமிழரசு கட்சிக்குள் புதிய தலைவருக்கான போட்டி இடம்பெறுகின்றது. எவர் தலைவரானாலும் எந்தவோர் அதிசயமும் இடம்பெறப் போவதில்லை.

இந்த அடிப்படையில் 'தை' தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை. அரசியல் தொடர்பில் நாம் தொடர்ந்தும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றோம் - அதாவது, அரசியல் என்பது சாத்தியங்களின் கலை. சூழ்நிலையை புரிந்துகொண்டு அதற்கேற்ப கிடைக்கும் வாய்ப்புகளை தந்திரோபாயமாக கையாளும் வல்லமையுள்ள தலைமைகளை எந்த சமூகம் பெற்றிருக்கின்றதோ அந்த சமூகமே அரசியலால் நன்மை பெறும். துரதிர்ஷ்டவசமாக அவ்வாறான தலைமைகளை தமிழ் மக்கள் இதுவரை கண்டடையவில்லையா என்னும் கேள்வியே எழுகின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் சில தலைவர்கள் மீது மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். அன்றைய அரசியல் சூழலே அதற்கான காரணமாகும். ஆனால், மக்களின் நம்பிக்கை வெற்றிகொள்வதற்கு ஏற்றவாறு அரசியலை கையாள்வதில் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. அவர்களது தோல்விக்கான காரணத்தை ஒரு வரியில் கூறுவதனால், அவர்களிடம் அர்ப்பணிப்பு இருந்தது - உண்மையுமிருந்தது. ஆனால், சூழ்நிலைகளுக்கு ஏற்ப தந்திரோபாயமான தீர்மானங்களை எடுக்க முடியவில்லை. சூழ்நிலையை கருத்தில் கொண்டு தீர்மானங்களை எடுக்க முடியாதவர்கள் எவ்வளவுதான் நல்லவராகவும் வல்லவராகவும் இருந்தாலும்கூட, அவரால் அரசியலில் வெற்றியை காண்பிக்க முடியாது.

எனவே, இங்கு விடயம் - ஒருவர் எந்தளவு அர்ப்பணிப்புடன் இருக்கின்றார் எந்தளவு கொள்கையில் உறுதியாக இருக்கின்றார் என்பதல்ல - மாறாக, அவரால் புதிய சவால்களை புரிந்துகொண்டு, அதற்கேற்ப துணிகரமான முடிவுகளை எடுக்க முடிகின்றதா என்பதுதான். ஓர் அரசியல் தலைவர் என்பவர் முடிவுகளை எடுக்கும்போது, மற்றவர்களின் விமர்சனங்களை கருத்தில் கொள்ளக்கூடாது. ஒரு கட்சி துரோகி என்று பிரசாரம் செய்யும் என்பதை கருத்தில் கொண்டு காலத்தில் எடுக்க வேண்டிய தீர்மானங்களிலிருந்து பின்வாங்கக்கூடாது. அவ்வாறான தலைவர்கள்தான் தமிழ் மக்களுக்கு தேவை.

அப்படியான தலைவர்களை தமிழ் மக்கள் எப்போது பெறுகின்றார்களோ அப்போதுதான் தமிழ் மக்களின் வாழ்வில் தினந்தோறும் தைத் திருநாளை உணரலாம். இல்லையென்றால், தைகள் பிறக்கும் - கடந்துசெல்லும் அரசியலில் எந்தவோர் அதிசயமும் நடைபெறப் போவதில்லை. வெறுமனே அரசியல்வாதிகள்மீது மட்டும் குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டிருக்கவும் முடியாது. மக்களும் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும். விழிப்புணர்வற்ற மக்கள் கூட்டமொன்றால் தெரிவு செய்யப்படும் அரசியல் தலைவர்கள் உண்மையில் தலைவர்கள் அல்ல - மாறாக, அவர்கள் மக்களின் பெயரால் வலம்வரும் அரசியல் முகவர்களாவர்.

இந்த ஆண்டிலாவது காலத்தை விளங்கிச் செயல்படும் அரசியல் போக்கொன்றின் பின்னால் நமது மக்கள் அணிதிரள வேண்டும். அரசியல் யதார்த்தங்களை முன்வைப்பவர்களை போற்றும் பண்பை காண்பிக்க வேண்டும்.

## களனி பல்கலைக்கழகத்துக்கு சென்ற மைத்திரியின் சகோதரருக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 16

களனி பல்கலைக்கழகத்துக்கு விரிவுரை ஆற்றுவதற்காக வருகைதந்த பிரபல வர்த்தகர் டட்லி சிறிசேனவுக்கு மாணவர்களால் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

டட்லி சிறிசேனவின் காரை மறித்த மாணவர்கள் அவரை பல்கலைக் கழகத்திற்குள் செல்வதற்கு அனுமதிக்காது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.





அத்துடன், களனி பல்கலைக்கழகத்தில் டட்லியின் விரிவுரைகள் தேவையில்லை என மாணவர்கள் தெரிவித்துள்ளனர். நாட்டில் அரிசியை மறைத்து வைத்து விலையை அதிகரித்ததாக டட்லி மீது மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனிடையே, களனி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் உள்ளிட்டவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர். அத்துடன், டட்லி சிறிசேனவை உள்ளே அனுமதிக்குமாறு கோரினர். இருப்பினும், மாணவர்கள் அவருக்கு அனுமதி வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

டட்லி சிறிசேன அரலிய ரைஸ் உள்ளிட்ட வர்த்தக நிறுவனங்களுக்கு சொந்தக்காரர் என்பதுடன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

## "ஜனாதிபதி பணிமனை 2.2 கோடி ரூபாய் மின் கட்டண நிலுவை"



கொழும்பு, ஜன. 18

ஜனாதிபதி செயலகம் செலுத்த வேண்டிய 22 மில்லியன் ரூபாய் மின் கட்டணத்தை செலுத்தும் நடவடிக்கையை முற்றாக கைவிட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

செயலகத்தில் உள்ள மின் தூக்கிகள் மற்றும் குளிரூட்டிகளின் செயற்பாட்டிற்காக இந்தப் பணம் செலுத்தப்பட வேண்டும். எனினும், பணத்தை செலுத்தத் தவறியுள்ளதுடன் அதற்கு பதிலாக ஜனாதிபதி செயலகம்,மின்சாரத்தை வெளி நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மின்சார சபைக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் போது ஜனாதிபதி செயலகம் மின்சார கட்டணத்தை செலுத்தாமல் இருப்பது நியாயமற்ற வெட்கக்கேடான செயல் எனவும் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார். (அ)

# நாட்டுக்கு தற்போதைய நிலையில் தேசிய தலைவர் ஒருவரே தேவை!

## முன்னாள் அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 16

நாட்டுக்கு தற்போதைய சந்தர்ப்பத்தில் தேவைப்படுவது தலைவர் அல்ல எனவும் தேசிய தலைவர் ஒருவரே தேவை எனவும் முன்னாள் அமைச்சர் பீ. ஹரிசன் தெரிவித்துள்ளார்.

காலி நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் காலி மாவட்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் நாட்டிற்கு தேசிய தலைவராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே இருக்கின்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.


அதேவேளை, இந்த மாநாட்டில் உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக் கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கரமசிங்க என குறிப்பிட்டுள்ளார்.

இதனால், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை மாநாட்டில் உரையாற்றியுள்ள முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், பொருளாதார பிரச்னைக்கு தீர்வு காண்பதில் சர்வதேச ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்ளக்கூடிய சர்வதேசம் அங்கீகரித்துள்ள தலைவர் ரணில் விக்கிரமசிங்க - என்றார்.

அரசியல் வாக்குறுதிகள் இல்லாத கொள்கை ரீதியான அரசியல் நாட்டுக்கு அவசியம். அதனை தற்போதைய ஜனாதிபதி செயலில் ஒப்புவித்து வருகிறார். அரசியல் காரணமாக ரணில் விக்கிரமசிங்க, கொள்கைகளை காட்டிக் கொடுக்காததால், ஐக்கிய தேசியக்கட்சி பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜனவரி - 16 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - தை 02
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சஷ்டி




**மேடம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். சாதித்துக்காட்டும் நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். திருப்தி உண்டாகும். சக ஊழியர்கள் நட்பு பாராட்டுவார்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால்சில விமர்சனங்களுக்கும் கேலிப்பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**கன்னி**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களை அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வீடு, வாகனங்களை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். மேலதிகாரிகளின் கரிசனம் கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**
பால்ய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உங்களுக்கு உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் நெருக்கமாவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல், வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிவரும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். பொறுமைத் தேவைப்படும்.

# ஏறுதழுவுதல் போட்டிகள் நேற்று கோலாகல ஆரம்பம்!



*மதுரை, ஜன. 16*

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் ஏறுதழுவுதல் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. இந்தப் போட்டிகள் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறவுள்ளன.

அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் போட்டிகளில் எல்லாமாக சேர்த்து 6 ஆயிரம் காளைகளும், 4 ஆயிரத்து 514 வீரர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இதேநேரம், இந்தப் பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று போட்டிகளிலும் சிறந்த காளை, சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின், விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஆகியோர் சார்பில் தலா ஒரு கார் என்ற அடிப்படையில் மொத்தம் 6 கார்கள் பரிசாக வழங்கப்பட உள்ளன.

மேலும், இரண்டாம் பரிசாக கார், கன்றுடன் கூடிய நாட்டுப் பசு, தங்கக் காசு, மோட்டார் சைக்கிள், குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட இலத்திரனியல் சாதனப் பொருட்கள் பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.

இதனிடையே, நேற்று அவனியாபுரம் ஏறுதழுவுதல் போட்டிகளில் 40 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்நாட்டிலும் இராமருக்கு கோயில் கட்ட பா. ஜ. க. முடிவு

*சென்னை, ஜன. 16*

அயோத்தி இராமர் கோவில் மக்களிடையே பெரும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தியுள்ளது. இதை பா. ஜ.கவினர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி வருகின்றனர். தமிழகத்திலும் இராமரை பயன்படுத்த பா. ஜ. க. முடிவெடுத்து உள்ளது என்று கூறப்படுகின்றது.

அயோத்தியை போலவே தமிழ்நாட்டிலும் புதிய இராமர் கோவிலைக் கட்ட முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனவாம்.

தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகே இதற்கான நிலம் வாங்க ஏற்பாடுகள் நடக்கிறதாம். இராமர் கோவிலை நிர்வகிக்கும், அயோத்தி இராமர் கோவில் அறக்கொடை தென் மாநிலங்களில் கால் பதிக்க விரும்புகிறதாம். இந்த அறக்கொடை நிறுவனம்தான் தமிழகத்தில், 10 ஏக்கர் நிலம் வாங்கி ராமர் கோவிலை கட்டப் போகிறதாம்.

'பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பின், இதற்கான வேலைகள் சூடுபிடிக்கும் பிரதமர் மோடி தான் தமிழக இராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டுவார்' என்கின்றனர். தமிழ்நாட்டில் 2026இல் சட்டசபை தேர்தல் நடைபெறும்போது, இந்த இராமர் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அறிய வருகின்றது. (ஐ)

# 2000 கோயில்களுக்கு கும்பாபிஷேகம்!

*சென்னை, ஜன. 16*

2024ஆம் ஆண்டு இறுதிக்குள் 2 ஆயிரம் கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்திடும் வகையில் செயலாற்றி கொண்டிருக்கிறோம் என்று இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

தி. மு. க. ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் ஆயிரத்து 224 கோவில்களில் குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன. இந்த மாத இறுதிக்குள் மேலும் 40 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் 2 ஆயிரம் கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்திடும் வகையில் செயலாற்றி கொண்டிருக்கிறோம் - என்றார். (ஐ)

# அண்ணாமலை பாதயாத்திரை நிறைவில் பிரதமர் பங்கேற்பார்

*சென்னை, ஜன. 16*

தமிழக பா.ஜ. தலைவர் அண்ணாமலை மேற்கொண்ட பாத யாத்திரை நிறைவு விழா பொதுக்கூட்டத்தை சென்னையிலும் விவசாயிகள் மாநாட்டை கோவையிலும் நடத்த அந்தக் கட்சி திட்டமிட்டுள்ளது. அதில் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளார்.

அண்ணாமலையின் பாத யாத்திரையை எதிர்வரும் 10ஆம் திகதி முடிக்க மேலிடம் அறிவுறுத்தியுள்ளது. பாதயாத்திரையின் நிறைவு விழாவை சென்னையில் நடத்தவும் அதை பாராளுமன்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டமாக நடத்தவும் பா. ஜ. க. நிர்வாகிகள் ஆலோசித்து வருகின்றனர்.

தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்களே உள்ள நிலையில் ஜனவரி மாதத்தில் மட்டும் பிரதமர் மோடி இரண்டாவது முறையாக தமிழகத்துக்கு வருகை தருகிறார். பெப்ரவரி மாதமும் கோவை, சென்னை என அடுத்தடுத்த கூட்டங்களில் பங்கேற்க அவர் திட்டமிட்டு உள்ளமையால் தமிழக பா.ஜ. கவினர் உற்சாகத்தில் உள்ளனர். (ஐ)

# மக்கள் மீது கவலை இல்லாத அரசாங்கமாக தி. மு. க. உள்ளது!

**எடப்பாடி பழனிசாமி**

*சேலம், ஜன. 16*

இரண்டரை ஆண்டு கால தி. மு. க. ஆட்சியில் தமிழ்நாட்டு மக்கள் என்ன நன்மையை அனுபவித்தார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் மீது துளியும் கவலையில்லை இல்லாத அரசாக தி. மு. க. உள்ளது - என்று கூறியுள்ளார் எடப்பாடி பழனிசாமி.

அ. தி மு. க. பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி சமத்துவ பொங்கலை சேலத்தில் கொண்டாடினார். இதன் பின்னர் அவர் பேசியதாவது

"இரண்டரை ஆண்டு கால தி. மு. க. ஆட்சியில் தமிழ்நாட்டு மக்கள் என்ன நன்மையை அனுபவித்தார்கள். ஏழை எளிய கடைக்கோடியில் உள்ள மக்களுக்கு எந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை.

தமிழ்நாட்டு மக்கள் மீதும் துளியும் கவலையில்லை இல்லாத அரசாக தி. மு. க. உள்ளது. நியாய விலைக் கடைகளில் ஏழை, எளிய மக்களுக்கு முறையே பொருட்கள் வழங்க வேண்டும்.

அ. தி. மு. க. ஆட்சியில் திட்டமிட்டுதலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் சிறப்பாக இருந்தது. விவசாயிகளின் கவலைகளை போக்குகின்ற ஆட்சியை அ. தி. மு. க. அரசாங்கம் அமைத்தது என்ற சிறப்பை பெற்றோம்." - என்றார். (ஐ)

# வற் வரி அதிகரிப்பு காரணமாக சுற்றுலாப் பயணிகளும் சிரமம்!

கொழும்பு, ஜன. 16

**வற் எனப்படும் பெறுமதி சேர் வரி அமுல்படுத்தப்பட்டமையினால் சீகிரியாவை பார்வையிட வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாக சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சீகிரிய சுற்றுலா வழிகாட்டிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுவரை காலமும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் சீகிரியாவை பார்வையிடுவதற்கு, அனுமதிச் சீட்டுக்களை டொலரில் கொள்வனவு செய்யும் நிலை காணப்பட்டது.

தற்போது, பெறுமதி சேர் வரி அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் அனுமதி சீட்டுக்கள் ரூபாய் நாணய அலகில் மாத்திரம் வழங்கப்படுதாக அந்த சங்கத்தின் தலைவர் சமன் மோரேமட தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சீகிரியாவை பார்வையிடுவதற்காக வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவருக்கு 30 டொலர் அறவிடப்பட்டு வந்த நிலையில், வற் எனப்படும் பெறுமதி சேர்வரி திருத்தத்தை அமுல்படுத்தியதன் பின்னர், அந்த தொகை 36 டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகள் டொலரில் அனுமதி சீட்டுக்களை கொள்வனவு செய்யும் நிலைமை நடைமுறையில் உள்ளது.

எனினும் மீதமுள்ள பணத்தை டொலரில் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

இதன்காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ரூபாய் மற்றும் வங்கி அட்டைகளில் அனுமதி சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது, பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சீகிரியாவிற்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவருக்கு இலங்கை நாணயத்தில் 11,772 ரூபாய் அறவிடப்படுகிறது.

இதன்காரணமாக பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சீகிரியாவிற்கு விஜயம் செய்யாமல் சீகிரியாவை சுற்றி உள்ள இடங்களை பார்வையிட செல்வதாகவும் சீகிரிய சுற்றுலா வழிகாட்டிகள் சங்கத்தின் தலைவர் சமன் மோரேமட மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# தேயிலைக்கான உரத்தின் விலையை குறைக்க முடிவு

கொழும்பு, ஜன. 16

தேயிலைக்கு பயன்படுத்தப்படும் உர மூடை ஒன்றின் விலையை 8500 ரூபாவாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போது உர மூடையொன்று 12,000 முதல் 14,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக அமைச்சர் கூறினார்.

இதன் காரணமாக தோட்ட உரிமையாளர்கள் தேயிலை பயிர்ச்செய்கைக்கு உரமிடுவது குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் ஒரு ஏக்கரில் பறிக்கப்படும் தேயிலையின் நிறை 216 கிலோகிராமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



இந்த நிலையில், தேயிலைக்கு பயன்படுத்தப்படும் உரத்தின் விலையை குறைத்து விற்பனை செய்வதற்கு அரசுக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# காலி சிறைச்சாலையின் செயற்பாடுகள் வழமைக்கு

கொழும்பு, ஜன. 16

மூளைக் காய்ச்சல் காரணமாக கைதி ஒருவர் உயிரிழந்தையடுத்து தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த காலி சிறைச்சாலையின் செயற்பாடுகள் தற்போது வழமைக்கு திரும்பியுள்ளன.

காய்ச்சல் அறிகுறிகளை கொண்டிருந்த அனைத்து கைதிகளும் தனிமைப்படுத்தல் மற்றும் சிகிச்சையின் பின்னர் தற்போது மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் மூளைக் காய்ச்சல் காரணமாக கடந்த 3ஆம் திகதி உயிரிழந்ததையடுத்து கடந்த 7ஆம் திகதி முதல் குறித்த சிறைச்சாலையின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

காய்ச்சல் அறிகுறிகளை வெளிப்படுத்திய மேலும் 8 கைதிகள் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் இருவர் மாத்திரமே தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி சிறைச்சாலையின் நிலைமை காரணமாக, நீதிமன்ற நடவடிக்கைகள் நிகழ்நிலை தொழில்நுட்பத்தின் மூலம் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் பார்வையாளர்களின் வருகையும் மட்டுப்படுத்தப்பட்டது.

அத்துடன், புதிதாக வரும் கைதிகள் அனைவரும் அகுனகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் தற்போது நிலைமை சீரடைந்துள்ளமையினால் கைதிகளை மீண்டும் காலி சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்வதற்கு அனுமதித்துள்ளதாக சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின் கீழ் புதிய வீட்டுக் கடன் இம்மாத இறுதிக்குள்

கொழும்பு, ஜன. 16

"அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் 15,000 புதிய வீட்டுக் கடன்கள் வழங்கும் பணிகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீடு திருத்த வேலைகளுக்காக இந்த வீட்டுக்கடன்கள் வழங்கப்படும் என அதன் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக பயனாளிகளுக்கு இந்த வீட்டுக்கடன்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்த ஆண்டு வீடமைப்பு அபிவிருத்திக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு 7,650 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் முதல் வேலைத்திட்டமாக "அனைவருக்கும் வீடு" வீடமைப்பு கடன் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கிடையில், கடந்த காலத்தில் பல்வேறு அரசாங்கங்களால் ஆரம்பிக்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட 98,000 வீடுகளின் கட்டுமானப் பணிகளை விரைவாக முடிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அதற்கு 24,000 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக அதிகார சபை கூறுகிறது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வரும் 101 கிராமங்களில் 07 கிராமங்களில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்தார்.

இது தவிர, 94 கிராமங்களில் 2,063 வீடுகள் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 690 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 337 வீடுகளின் நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தலைவர் குறிப்பிட்டார்.

இதன்படி மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, கண்டி, வவுனியா, பதுளை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கிராமங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார். (அ)

# அரச சேவையாளர்களின் செலவுகளை கட்டுப்படுத்தும் சுற்றறிக்கை வெளியீடு

## சலுகைகளிலும் மட்டுப்பாடுகள்

கொழும்பு, ஜன. 16

அரச செலவுகள் உயர்வடைந்துள்ள நிலையில், அரச வருமானம் மட்டுப்படுத்தப்பட்டதால் அரச சேவையாளர்களின் செலவுகளை மட்டுப்படுத்தும் வகையில் நிதியமைச்சு விசேட புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அரச சேவையாளர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவு அவர்களின் அடிப்படை சம்பளத்தை அண்மித்ததாக அமையக் கூடாது. அத்துடன் அரச சேவையாளர்களுக்கு வழங்கபட்ட எரிபொருள் கொடுப்பனவு உள்ளிட்ட பல சலுகைகளுக்கு மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் அல்லது அந்த நிறுவனங்களை மூடுவதற்கான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரச செலவுகள் உயர்வடைந்துள்ள நிலையில் அரச வருமானமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அரச சேவையாளர்களின் செலவுகளை மட்டுப்படுத்தும் வகையில் திறைச்சேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன விசேட சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார்.

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,மாகாண பிரதான செயலாளர்கள், திணைக்களத்தின் பிரதானிகள், மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரசியலமைப்பு சபை அல்லது அரச நிறுவனங்களின் பிரதானிகள் அனைவருக்கும் புதிய சுற்றறிக்கை நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரச செலவுகள் உயர்வடைந்துள்ள நிலையில் அரச வருமானம் மட்டுப்படுத்தப்பட்டதால் அரச சேவையாளர்களின் செலவுகளை மட்டுப்படுத்தும் வகையில் திறைசேரி செயலாளர் விசேட சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய அரச சேவையாளர்களுக்கான மேலதிக கொடுப்பனவு, விடுமுறை தின கொடுப்பனவு, பயணச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் என்பன விசேட மானியங்கள் திட்டமிடலுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

அத்துடன் சேவையில் இருத்தல் அல்லது சேவைக்கு சமூகமளித்தலை உறுதிப்படுத்த தவறும் பட்சத்தில் மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது. மாதாந்த மேலதிக கொடுப்பனவு அடிப்படைச் சம்பளத்தை விட அதிகமாகக் கூடாது.

சாதாரண கடமைகளுக்கு வருகை தருதல் அல்லது வேறு போக்குவரத்து வசதிகளுக்காக இனிமேல் அரச நிதியை பயன்படுத்த முடியாது. சொந்த வாகனம் உள்ள அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து செலவுகளுக்காக செலவுகளை பெற்றுக் கொள்ளும் அதிகாரிகள் இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் இருப்பில் உள்ள வாகனத்தை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட மாட்டாது.

அத்துடன் எரிபொருள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறும் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச அதிகாரிகள் வெளிநாடு செல்லும் போது அதனுடன் தொடர்புடைய வெளிநாட்டு நிறுவனம் அல்லது உரிய தரப்பினர் அந்த வெளிநாட்டு பயணத்துக்கான செலவுகளை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அரச நிதியை இனி வெளிநாட்டு பயணங்களுக்கு பயன்படுத்த முடியாது.

திறைசேரியின் முழுமையான அனுமதி இல்லாமல் அரச தேவைகளுக்காக கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெறுவதை உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது. (அ)

# இறுக்கமான பொருளாதார கொள்கைகளை பின்பற்றுக!

## வலியுறுத்துகிறது சர்வதேச நாணய நிதியம்

யாழ்ப்பாணம், ஜன. 16

**நாட்டை கட்டியெழுப்புவதற்கு தற்போதைய இறுக்கமான பொருளாதார கொள்கைகளை பின்பற்றுவது அவசியம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இதனை குறிப்பிட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் குழு, வர்த்தகப் பிரதிநிதிகள், சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துக்கொண்டனர்.

இந்த சந்திப்பில் வட மாகாணத்தின் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி குறித்து மாகாண ஆளுநர், சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன், நாட்டில் ஊழல் ஒழிப்பு சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர்.

அதேநேரம், புதிய வரிக் கொள்கை பாரிய சுமையாக அமைந்துள்ளதென வர்த்தகப் பிரதிநிதிகளும், சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் பிரதிநிதிகளும் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில், வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மக்கள் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதை தாம் அறிந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழு பிரதான பீட்டர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.

கடந்தகால பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே நாடு தற்போதைய நிலையை அடைந்துள்ளதாகவும், நிலைமையை மாற்றியமைக்க குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இறுக்கமான கொள்கைகளை பின்பற்றுவது அவசியம் எனவும் குறிப்பிட்ட அவர் கடந்த காலங்களில் இலங்கை பல சிறந்த முன்னேற்றங்களை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

(அ)

# நீராட சென்ற 2 மாணவிகள் ஒரு மாணவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 16

களுத்துறை - களுகங்கையில் நீராடச்சென்ற மூன்று மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

15 மற்றும் 16 வயதுகளையுடைய இரண்டு மாணவிகளும் 17 வயதுடைய மாணவரொருவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

களுத்துறை பன்வில மற்றும் தொடங்கொடை பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்கள் தற்போது பிரேத பரிசோதனைக்காக நாகொட போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# படைக்கல சேவிதர் 30ஆம் திகதி ஓய்வு

கொழும்பு, ஜன. 16

பாராளுமன்றத்தில் படைக்கல சேவிதராக கடமையாற்றிவரும் நரேந்திர பெர்னாண்டோ எதிர்வரும் 30ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளார்.

2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி முதல் பாராளுமன்றத்தில் படைக்கல சேவிதராக கடமையாற்றி வரும் அவர் பாராளுமன்றத்தில் 42 வருட சேவை காலத்தை நிறைவு செய்யவுள்ளார்.

அவர் ஓய்வுபெறவுள்ளதன் காரணமாக, அவரது சேவையை பாராட்டி பாராளுமன்றத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி பாராட்டு நிகழ்வொன்றும் நடத்தப்படவுள்ளது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம், பாராளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் படைக்கல சேவிதர் ஆகியோருக்கு மாத்திரமே இவ்வாறான பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

(அ)

# சிறுவனைத் துஷ்பிரயோகம் செய்த நடன ஆசிரியர் கைது!

கொழும்பு, ஜன. 16

சிறுவன் ஒருவனைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் நடன ஆசிரியர் ஒருவர் பிலியந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை பெலன்வத்தை பகுதியில் வகுப்பு முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த 12 வயதான சிறுவனை நடன ஆசிரியர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றுள்ளார்.

மோட்டார் சைக்கிள் சிறிது தூரம் சென்று கொண்டிருந்த போது சந்தேக நபரின் உடலைப் பிடித்துக் கொண்டிருந்த சிறுவனுக்கு தனது அந்தரங்கைப் பகுதியை காட்டி அதனைப் பிடிக்குமாறு கூறி சிறுவனை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் மாணவனை ஏற்றிச் சென்றபோது நடந்து கொண்ட விதம் சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

(அ)

# 220 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 16

ஜோர்தானில் இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டதால், அங்கு தொழில்புரிந்த இலங்கையர்களை சட்ட நடவடிக்கைகளின் பின்னர் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் 220 இலங்கை தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கு அமைச்சர் மனுஷ நாணயக்கார பணிப்புரை விடுத்துள்ளார்.



ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்படுவதால் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரகத்தின் தொழிலாளர் நலப் பிரிவு, அந்நாட்டு தொழில் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த தொழிலாளர்களுக்கு தாயகம் திரும்புவதற்கான விமான பயணச்சீட்டினை வழங்க அந்நாட்டு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

(அ)

# உச்சம் தொடும் மரக்கறி விலை!

கொழும்பு, ஜன. 16

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் வரலாற்றில் முதல் தடவையாக ஒரு கிலோகிராம் கரட் 1000 - 1100 ரூபாவிற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், நுவரெலியா பிரதேச விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோகிராம் கரட் 900 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அவ்வாறு பெறப்பட்ட கெரட் சரியான தரம் வாய்ந்ததாக இல்லை எனவும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

லீக்ஸ் மற்றும் பீட்ரூட் 450 - 500 ரூபாய்க்கும், போஞ்சி 750 - 800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 1600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் கெரட் 350 - 400 ரூபா விற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# போதை மாத்திரைகளுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன. 16

தலைமன்னார் மற்றும் மிஹிந்தலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 10,600 போதை மாத்திரைகளுடன் இருவர் கைதாகியுள்ளனர்.

காவல்துறையினரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து முன்னெடுத்த இருவேறு சுற்றிவளைப்புகளில் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 38 வயதுடைய மிஹிந்தலை மற்றும் தலைமன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மிஹிந்தலை மற்றும் தலைமன்னார் காவல் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# 72 சுகாதார நிபுணர் சங்கங்கள் பணிப்புறக்கணிப்புக்குத் தயார்!

கொழும்பு, ஜன. 16

72 சுகாதார நிபுணர் சங்கங்கள் இணைந்து இன்று காலை 6.30 முதல் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளன.

மருத்துவர்களுக்கு அரசாங்கம் வழங்க தீர்மானித்துள்ள 35,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவை தங்களுக்கும் வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருத்துவ ஆய்வுக்கூட நிபுணர்கள், கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள், மருந்தாளுநர்கள், தாதியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் நோயாளர் காவு வண்டி ஊழியர்கள் உள்ளிட்ட 72 தொழிற்சங்கங்கள் இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் மதுவரி அனுமதி கட்டணம் தொடர்பில் இறுதித் தீர்மானம்!

கொழும்பு, ஜன. 16

ஜனாதிபதி நாடு திரும்பிய தன் பின்னர் மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொண்டு, உயர்த்தப்பட்டுள்ள மதுவரி அனுமதிப்பத்திர கட்டணம் தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உள்ளிட்ட தரப்பினரினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனைகளை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதியமைச்சர் என்ற ரீதியில் வருடாந்த மதுவரி அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணத்தை கடந்த 12 ஆம் திகதி முதல் அதிகரித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.



(அ)

# தண்டனை விதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு!



கொழும்பு, ஜன. 16

**பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டங்களின் கீழ் தண்டனை பெற்று விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்காக ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த இரண்டு கைதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னிப்பு வழங்கியுள்ளார்.**

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் பரிந்துரையின் பேரில் கைதிகளான நாகலிங்கம் மதன்சேகர் மற்றும் செல்வத்துரை கிருபாகரன் ஆகியோருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் கைதிகள் நல்ல நடத்தையை வெளிப்படுத்தியதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 34(1) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியுள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் இருவரும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

மதன்சேகருக்கு மார்ச் 29, 2023 அன்று அவசரகால விதிமுறைகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டில் கிருபாகரன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டார். அவர் தனது தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தார்.

எனினும், ஜூலை 20, 2022 அன்று, மேன்முறையீட்டு நீதிமன்றம் கொழும்பு உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பையும் தண்டனையையும் உறுதி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டைக் கொள்ளையிட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்

## பணம் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு வழங்கப்படும்

கொழும்பு, ஜன. 16

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு கொண்டு சென்றவர்களை சட்டத்திற்கு முன் நிறுத்தி, கொள்ளையிட்ட பணத்தை நாட்டுக்கு பெற்றுக்கொண்டு அதனை கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு வழங்க போவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சியில் இருந்துக் கொண்டு கோப்புகளை காட்டி வீண் பேச்சுகளை பேசாது, ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றத்திற்கு சென்று நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு கொண்டு சென்றவர்கள் யார் என்பதை பெயர்களுடன் நாட்டுக்கு வெளிப்படுத்தி காட்டியது.

இதன் அடுத்த கட்டமாக அடிப்படை உரிமை மனுவை பயன்படுத்தி, பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரத்தை இழந்துள்ள நபர்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (அ)

# கந்தக்காடு சம்பவம் குறித்து அறிக்கை இன்று கையளிப்பு

கொழும்பு, ஜன. 16

வெலிகந்தை - கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் அண்மையில் இடம்பெற்ற மோதல் தொடர்பான அறிக்கை இன்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மதிய உணவு வேளையின் போது, கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் இரு குழுக்களுக்கிடையில் இந்த மோதல் இடம்பெற்றது.

இதில் 29 கைதிகள் காயமடைந்ததுடன், மோதல் இடம்பெற்ற வேளையில், குறித்த புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து மேலும் பல கைதிகள் தப்பிச் சென்றனர்.

இதேவேளை, கடந்த டிசம்பர் மாதம் 11ஆம் திகதி கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற இதேபோன்றதொரு மோதலின்போது, 140 இற்கும் மேற்பட்ட புனர்வாழ்வு கைதிகள் தப்பியோடியிருந்தனர்.

இந்தநிலையில், கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் இந்த மோதல்கள் தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாச உடனடியாக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்களற்ற மாதிவெல அரச குடியிருப்புக்கள்

## 50 வீதமானோர் வெளியாட்கள்

கொழும்பு, ஜன. 16

மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பு தொகுதியில் வசிக்கும் 50 வீதமானோர் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லர் எனவும் வெளியாட்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் இந்த குடியிருப்புகளில் வசிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குடியிருப்பு கொழும்பில் இருந்து வெகு தொலைவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகிறது.

குறித்த வீடுகளை பராமரிப்பதற்கு அரசாங்கம் வருடாந்தம் பல கோடி ரூபாவை செலவு செய்கிறது.

இந்த நிலையில், குறித்த வீடுகளை வெளியாட்களுக்கு வழங்க வேண்டாம் என பலமுறை அறிவுறுத்தல் விடுக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து இவ்வாறு வீடுகள் வேலையாட்களுக்கு வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்மதத்துடன் இந்த வீடுகள் வழங்கப்படுவதாகவும், இதன் காரணமாக அவர்களை வெளியேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோக பூர்வ குடியிருப்பு வளாகத்தை நடத்துவதற்கான செலவும் இருமடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# அதிக விலைக்கு எரிவாயு இறக்குமதி செய்வதால் அரசு பாரிய நட்டத்தை எதிர்கொள்ளும் நிலை!

## தேசிய கணக்காய்வு அலுவலகம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 16

அதிக விலைக்கு திரவ எரிவாயுவை இறக்குமதி செய்வதன் மூலம் 1,139 பில்லியன் ரூபா கூடுதல் செலவை அரசாங்கம் ஏற்க வேண்டியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட் நிறுவனத்தினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான திரவமாக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயு கொள்வனவு தொடர்பான விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு தேசிய கணக்காய்வு அலுவலகம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

குறைந்த விலையில் எரிவாயு கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அதிக விலைக்கு எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான புதிய கொள்வனவு நடவடிக்கையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், திரவமாக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட பில்லியன் டொலர்களில், லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு ஒப்புக் கொள்ளப்பட்ட 120 மில்லியன் டொலர் மானியம் பயன்படுத்தப்படவில்லை எனவும் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# சர்வதேச இரத்தினக்கல் ஆய்வு மையம் இலங்கையில்!

கொழும்பு, ஜன. 16

முதன் முறையாக சர்வதேச இரத்தினக்கல் ஆய்வு மையம் ஒன்று இலங்கையில் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

அமெரிக்க மற்றும் சீன நிறுவனங்கள் இணைந்து வழங்கும் முதலீட்டின் ஊடாக பேருவளையில் இந்த ஆய்வு மையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்காக 10 லட்சம் அமெரிக்க டொலர் ஆரம்ப முதலீடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

பேருவளையில், சைனாபோட் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை இரத்தினக்கல் கண்காட்சியின் போது இந்த விடயம் அறிவிக்கப்பட்டது.

பெந்தோட்டையில் இடம்பெற்ற இந்த கண்காட்சி நேற்று நிறைவடைந்தது.

இந்த கண்காட்சியை காண்பதற்காக பல வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் இரத்தினக்கல் ஏற்றுமதி நிறுவனங்கள் பங்கு கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்த நிகழ்வில் உத்தேச சர்வதேச இரத்தினக்கல் ஆய்வு மையம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (அ)

# சகல விமான நிலையங்களிலும் பாதுகாப்பை அதிகரிக்க திட்டம்!

கொழும்பு, ஜன. 16

நாட்டின் அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், விமான நிலையத்தினூடாக முன்னெடுக்கப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் விமான நிலையப் பாதுகாப்புப் பணியாளர்களின் எண்ணிக்கையை 1,325 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (அ)

# 24 மணித்தியாலங்களில் 952 பேர் கைது!

கொழும்பு, ஜன. 16

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 உடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 952 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 11 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான 10 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் காவல்துறை போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் விசேட பணியகத்தினால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 29 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சுமார் 3 கிலோ ஐஸ் ரக போதைப்பொருள் மற்றும் 4,310 போதைமாத்திரைகள் உள்ளிட்ட பல போதைப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# அம்பாறை இயல்பு நிலைக்கு திரும்புகிறது!

## மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பில் ஹரீஸ் எம்.பி நடவடிக்கை

அம்பாறை, ஜன. 16

**அம்பாறையில் தொடர்ச்சியாக பெய்த அடை மழை மற்றும் வெள்ளத்தை கட்டுப்படுத்த அணைக்கட்டுகளின் வான்கதவுகள் திறக்கப்பட்டமையால் அம்பாறை மாவட்டம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் பல்வேறு குடும்பங்கள் இடம்பெயர்ந்தும், சில குடும்பங்கள் வெள்ளத்தினுள்ளும் வாழும் நிலை உருவாகியுள்ளது.**



இந்த மக்களின் தற்போதைய நிலைகளை ஆராயவும், நிவாரண உதவிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பல்வேறு நடவடிக்கைகளை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் வெள்ள நிலைகளை கண்டறிந்த அவர் அட்டாளைச்சேனை பிரதேச மக்களுக்கான நிவாரண தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பிலும் இடம்பெயர்ந்த மற்றும் வெள்ளத்தில் மூழ்கியுள்ள மக்களுக்கான உணவுத் தேவைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பிலும் அட்டாளைச்சேனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவை குழு தலைவர் அப்துல் ஹலீம் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடி தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பிரதேச செயலாளரையும் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

பல்வேறு பிரதேசங்களுக்கும் விஜயம் செய்து மக்களின் குறைகளை கேட்டறிந்து, பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் ஜனாதிபதி செயலாளர், அரசாங்க அதிபர், அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள உயர் அதிகாரிகள், அரச உயர் அதிகாரிகள் என பலரையும் தொடர்புகொண்டு மக்களுக்கு தேவையான அவசர தேவைப்பாடுகள் தொடர்பிலும், நிதி விடுவிப்பு தொடர்பில், வெள்ளநீர் வடிந்தோட செய்ய தேவையான விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து உலர் உணவு வழங்கிய முஷரப்

மட்டக்களப்பு, ஜன. 16

வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட அட்டாளைச்சேனை புறத்தோட்டம் கிராமத்திற்கு விஜயம் செய்த திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் அப்பகுதி மக்களை சந்தித்ததுடன் நிலைமைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸின் பங்கேற்புடன் இடம்பெற்ற இவ்விஜயத்தில் தன்னால் முடிந்த உதவிகளையும் புறத்தோட்ட மக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் வழங்கி வைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினருடன் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொத்துவில் கிளையின் தலைவர் மௌலவி ஏ.முகைதீன் பாவா ஷர்கி, ஹபீப் மௌலவி, பாராளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பு அதிகாரி அஸாம் அப்துல் அஸீஸ், பாராளுமன்ற உறுப்பினரின் ஒலுவில் இணைப்பாளர் எம்.ஜே.எம்.அஸ்ஹர், மத்திய குழு செயலாளர் ஏ.எல். கியாஸ்தீன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)



# கிழக்கு மாகாணத்தின் சேவைகளை பாராட்டிய சர்வதேச நாணய நிதியம்

திருமலை, ஜன. 16

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள், வேலைத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாணம் குறுகிய காலத்தில் அடைந்து வரும் வளர்ச்சிக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் பீட்டர் ப்ரூயர் (சிரேஸ்ட பணித் தலைவர்), சர்வத் ஜஹான் (வதிவிடப் பிரதிநிதி), சோபியா ஜாங் (சிரேஸ்ட பொருளாதார நிபுணர்), ஹூய் மியாவ் (சிரேஸ்ட நிதித்துறை நிபுணர்), ஹோடா செலிம் (சிரேஸ்ட பொருளாதார நிபுணர்), டிமிட்ரி ரோஸ்கோவ் (சிரேஸ்ட பொருளாதார நிபுணர்), சந்தேஸ் தூங்கானா (பொருளாதார நிபுணர்), மற்றும் மனவே அபேயவிக்ரம (உள்ளூர் பொருளாதார நிபுணர்) ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியத்தின் அலுவலகம் காத்தான்குடியில் திறந்து வைப்பு

மட்டக்களப்பு, ஜன. 16

காத்தான்குடியினை தலைமையகமாக கொண்டு இயங்கும் தொழில் வாண்மையாளர் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியத்தின் அலுவலகம் காத்தான்குடியில் கடந்த சனிக்கிழமை மாலை சேர் ராசிக் பரீட் மாவத்தையில் அமைந்துள்ள கிரசன்ட் கல்வி நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அமைப்பின் தலைவர் யூ.எல் எம்.என். முபீன் உட்பட பணிப்பாளர் சபை மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



அன்மையில் காத்தான்குடி மற்றும் அதனை அண்டிய மக்களின் இயல்பு வாழ்க்கையை மிக மோசமாக பாதிப்படையச் செய்த வெள்ளப்பெருக்கு தொடர்பில் ஆராயப்பட்டது. இது விடயமாக எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய மாற்றுதிட்டங்கள் தயாரிப்பது தொடர்பில் இதன் போது ஆராயப்பட்டது.

இவ்வேலைத் திட்டத்தினை பொறியியல் துறை சார்ந்த வல்லுனர்களின் ஆலோசனையினைப் பெற்று முழுமையான திட்டம் ஒன்றை தயாரிப்பதெனவும் கல்வி, சுகாதாரம், மற்றும் காணி உரிமைகள், இனப்பிரச்னை தீர்வில் முஸ்லிம்களின் வகிபாகம் தொடர்பிலும் மிக விரிவாக ஆராயப்பட்டு அதற்கு தேவையான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைப்பின் தலைவர் யூ.எல்.எம்.என். முபீன் இதன் போது தெரிவித்தார். (அ)

# 12 வருடங்களுக்கு பிறகு வெள்ளத்தில் மூழ்கிய வீதி



காரைதீவு, ஜன. 16

கடந்த 12 வருடங்களுக்கு பிறகு காரைதீவு பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

சேனநாயக்கா சமுத்திரத்தின் வான்கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டதால் இந்த வெள்ளம் பரவுகிறது. இதற்கு முன் 2010 ஆம் ஆண்டில் இத்தகையதொரு வெள்ளம் ஏற்பட்டிருந்தது.

இதனால் மக்கள் சிரமத்திற்கு மத்தியில் பயணிப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

காரைதீவு - அக்கரைப்பற்று வீதி காரைதீவு - அம்பாறை வீதிகளில் வெள்ளம் பாய்வதால் குறித்த வீதியில் போக்குவரத்துக்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை. காரைதீவு மாவடி பள்ளி வீதி முற்றாகவே அமிழ்ந்திருக்கின்றது. (அ)

# ஹைபர்சோனிக் வார்ஹெட் புதிய ஏவுகணை சோதனை!



## உலக நாடுகளை எச்சரிக்கும் வடகொரியா

பியொங்யாங், ஜன. 16

ஹைபர்சோனிக் வார்ஹெட் பொருத்தப்பட்ட புதிய திட எரிபொருள் ஏவுகணையை சோதனை செய்துள்ளதாக வட கொரியா தெரிவித்துள்ளது.

சக்திவாய்ந்த மற்றும் கடினமான ஆயுதங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை வட கொரியா மேற்கொண்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் இந்த ஏவுகணை சோதனை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை மற்றும் அதன் முதல் இராணுவ உளவு செயற்கைக் கோளை ஏவியதை அடுத்து பிராந்தியத்தில் பதற்றங்கள் அதிகரித்துள்ளன.

பசுபிக் பகுதியில் அமெரிக்கா உள்ளிட்ட அதன் நட்பு நாடுகளின் பிரசன்னத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள வடகொரியா, அணு ஆயுதத் தாக்குதலை நடத்தும் திறனை மேம்படுத்துவதாக உறுதியளித்துள்ளது.

நேற்று முன் தினம் பியோங்யாங் பகுதியில் இருந்து மதியம் 2:55 மணியளவில் ஏவப்பட்ட இந்த ஏவுகணையானது நாட்டின் கிழக்கு கடற்கரையில் இருந்து சுமார் 1,000 கிமீ வரை சென்றதாக தென்கொரியா அறிவித்துள்ளது.

இதேநேரம் இந்த ஏவுகணை பரிசோதனை நடவடிக்கை ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களை மீறுவதாக ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதேநேரம் இந்த ஏவுகணை சோதனை அச்சுறுத்தல் அல்ல என்றும் வட கொரியாவின் ஆயுதத் திட்டத்தின் நிலையற்ற தாக்கத்தை எடுத்துக்காட்டுவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய இராணுவத்துக்கு மாலைதீவு எச்சரிக்கை!



மலைதீவு, ஜன. 16

வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்குள் மாலைதீவில் உள்ள இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என மாலைதீவின் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் இந்திய பிரதமர் மோடி தொடர்பாக மாலைதீவைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலர் தெரிவித்த கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதன் காரணமாக இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையே உரசல் போக்கு தொடரும் நிலையில் சீனாவுடன் இணைப்பை பலப்படுத்த மாலைதீவு ஜனாதிபதி பல்வேறு உத்திகளை முன்னெடுத்து வருகின்றார்.

அதன் அங்கமாக மாலைதீவில் இருந்து இந்தியா தனது படைகளை வாபஸ் பெறுமாறு, அந்நாட்டு ஜனாதிபதி முய்சு காலக்கெடு விதித்துள்ளார்.

அதன்படி இந்திய இராணுவத்தினர் மார்ச் 15 இற்குள் அந்நாட்டை விட்டு வெளியேறியாக வேண்டும் என அவர் அறிவித்துள்ளார். (அ)

## நேட்டோ பயிற்சி

### 20 ஆயிரம் படைகளை அனுப்புகிறது பிரிட்டன்

லண்டன், ஜன. 16

பனிப்போருக்குப் பிறகு நேட்டோவின் மிகப்பெரிய இராணுவப் பயிற்சிகளில் ஒன்றுக்கு பிரித்தானியா 20,000 சேவை வீரர்களை அனுப்ப உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பா முழுவதும் 31 நாடுகளின் பயிற்சிக்கு இராணுவம், கடற்படை மற்றும் ராயல் விமானப்படை உறுப்பினர்களை அனுப்புவது தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கிராண்ட் ஷாப்ஸ் அறிவிப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனுக்கு மேலும் 2.5 பில்லியன் பவுண்டுகள் ஆதரவுப் பொதியை அமைச்சர்கள் அறிவித்ததை அடுத்து, யேமனில் உள்ள ஹூதிகள் மீது அமெரிக்காவுடன் இணைந்து றோயல் விமானப் படை வான்வழித் தாக்குதல்களை நடத்தியதை அடுத்து இந்த அறிவிப்புக்கள் வந்துள்ளன.(அ)



# வெடித்து சிதறிய மராபி எரிமலை அருகிலுள்ள கிராமங்கள் பாதிப்பு



ஜகார்த்தா, ஜன. 16

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள மராபி எரிமலை மீண்டும் வெடித்து சிதறியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த எரிமலை வெடிப்பிலிருந்து தீக்குழம்பு வெளியேறியதால், அருகில் உள்ள கிராமங்கள் பாதிக்கப்பட்டன எனவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 6.21 மணிக்கு எரிமலை வெடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த டிசம்பர் மாதம் மராபி எரிமலையில் வெடிப்பு ஏற்பட்ட போது, எரிமலையில் நடைபயணம் மேற்கொண்ட 75 பேரில் பலர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், 23 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சுமத்ரா தீவின் மிகவும் செயல்நிலையுள்ள எரிமலை மட்டுமன்றி, இந்தோனேசிய தீவுக்கூட்டத்தின் விழித்திருக்கும் 130 எரிமலைகளில் ஒன்று என்ற வகையிலும் மராபி கவனம் பெற்றுள்ளது. (அ)

# சர்வதேச மாணவர் எண்ணிக்கையை கட்டுப்படுத்த திட்டமிடுகிறது கனடா!

ஒட்டாவா, ஜன. 16

கனடாவில் வசிக்க அனுமதிக்கப்படும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த கனடா பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர், வெளியிட்டுள்ள தகவலின்படி, கனடா வீட்டு வசதி நெருக்கடிக்கான விமர்சனங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா தனது பொருளாதாரத்தை இயக்குவதற்கும், வயதான மக்களை ஆதரிப்பதற்கும் குடியேற்றத்தை சார்ந்துள்ளது மற்றும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆண்டுதோறும் குடியேற்றத்தை அதிகரித்து வருகிறார்.


பணவீக்கம் கட்டுமானத்தை மெதுவாக்கியது போலவே, குடியேற்றவாசிகள் மற்றும் சர்வதேச மாணவர்களின் அதிகரிப்பு வீடுகளுக்கான தேவையை தூண்டுவதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த ஆண்டு முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் சர்வதேச மாணவர்களுக்கான வரம்பை தாராளவாத அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் தீவிரம்!

## அமைதி மாநாட்டுக்கு சீனா அழைப்பு



பீஜிங், ஜன. 16

காஸா போர் நெருக்கடி குறித்து ஒரு பாரிய அளவிலான உத்தியோகப்பூர்வ அமைதி மாநாட்டிற்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

காஸா மோதல் தீவிரமடைந்து செங்கடல் பகுதி தற்சமயம் முக்கிய புள்ளியாக மாறியுள்ளமையினால் இஸ்ரேலிய-பலஸ்தீனிய அமைதி மாநாடு மற்றும் இரு நாடுகளின் தீர்வை செயல்படுத்துவதற்கான கால அட்டவணைக்கு சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி அழைப்பு விடுத்தார்.

வார இறுதியில் கெய்ரோவில் நடைபெற்ற எகிப்திய வெளியுறவு அமைச்சர் சமே ஷோக்ரியுடன் பேச்சுவார்த்தையின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வாங் யி, மத்திய கிழக்கில் உள்ள நியாயமான விடயங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் கோரினார்.

இதனிடையே, ஹமாஸ் போராளி குழு மூன்று இஸ்ரேலிய பணயக்கைதிகளின் காணொளியை ஒளிபரப்பியது மற்றும் அவர்கள் தொடர்பான அடுத்த கட்ட நகர்வு வெளியிடப்படும் என்றும் கூறியது.

காசாவில் மூன்று இஸ்ரேலிய பணயக் கைதிகளை சிறைப்பிடித்து வைத்திருப்பதைக் காட்டும் காணொளியை ஞாயிற்றுக்கிழமை ஹமாஸ் ஒளிபரப்பியது.

மற்றும் பாலஸ்தீனிய இஸ்லாமியக் குழுவிற்கு எதிரான தாக்குதலை நிறுத்தினல் அவர்களை விடுதலை செய்வோம் என்று இஸ்ரேலிய அரசாங்கத்திடம் வலியுறுத்தியது.

எல்லை தாண்டிய ஹமாஸின் தாக்குதல்களினால் சுமார் 240 பேர் பணயக் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் கூறுகிறது. அவர்களில் பாதி பேர் நவம்பர் போர் நிறுத்தத்தில் விடுவிக்கப்பட்டனர்.

132 பேர் காசாவில் தங்கியிருப்பதாகவும் அவர்களில் 25 பேர் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர். ஹமாஸின் ஒக்ரோபர் 7 தாக்குதலில் 1,200 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேல் கூறுகிறது.


அதேநேரம், இஸ்ரேலிய தாக்குதலில் சுமார் 24,000 பேர் கொல்லப்பட்டதாகவும், 60,000 க்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (அ)

# தமிழர்கள் நிம்மதியாக வாழ ராஜபக்ஷக்களே காரணம்!

## கூறுகின்றார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஜன. 16

**வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ ராஜபக்சக்களே காரணம் என்று முன்னாள் ஜனாதிபதியும் சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்தால் இந்த நாட்டில் மூவின மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அதில் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்துக்கு நாம் முடிவு கட்டிய பின்னர் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள். ஆனால், அவர்களை வைத்துக் கொண்டு இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளும், வெளிநாடுகளில் வாழும் புலிகளின் ஆதரவாளர்களும் சுயலாப அரசியலை நடத்துகின்றனர். இது கவலையை ஏற்படுத்தும் விடயம்.

அவர்கள், தமிழ் மக்கள் மீது போராட்ட சிந்தனையைத் தூண்டினாலும் அந்த மக்கள் மீண்டும் போரை விரும்பவில்லை. நிம்மதியான வாழ்க்கையே அவர்களின் விருப்பம். அதை நாம் அவர்களுக்கு 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தவுடன் ஏற்படுத்திக் கொடுத்து விட்டோம்.

வடக்கு - கிழக்கில் ராஜபக்சக்களை ஆதரிக்கும் தமிழ் உறவுகள் பலர் உள்ளனர். அவர்களுக்கு நாம் என்றும் நன்றி கூறுவோம்.

எதிர்வரும் தேர்தல்களில் வடக்கு - கிழக்கில் பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்படாது. வழமை போன்று எமக்குரிய வாக்குகள் கிடைக்கும். மொட்டுக் கட்சியின் வெற்றியில் தமிழ் மக்களின் பங்களிப்பும் முக்கிய இடம் வகிக்கும்-என்றார்.

(அ)

# ஒரு சீனா கொள்கையில் இலங்கை அரசு உறுதி

கொழும்பு, ஜன. 16

ஒரு சீனா கொள்கையில் உறுதியாகயிருப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

தாய்வானின் ஜனாதிபதி தேர்தலில் அந்த நாட்டின் இறைமையை வலியுறுத்தும் வில்லியம் லாய் சிங் வெற்றி பெற்றுள்ள நிலையிலேயே இலங்கை மீண்டும் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது.

தாய்வானில் தேர்தல்கள் அமைதியாக நடந்து முடிந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது ஒரு சீனா கொள்கைகளை முன்னிறுத்துவதில் பின்பற்றுவதில் தொடர்ந்தும் உறுதியாக உள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சீனாவின் இணக்கமான மீள்ஒருங்கிணைப்பை விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# தைக்கப்பட்ட ஆடைகளின் விலை அதிகரிக்கப்படாது

கொழும்பு, ஜன. 16

வற் வரி உயர்த்தப்பட்டுள்ள போதிலும் சந்தையில், தைக்கப்பட்ட ஆடைகளின் விலை அதிகரிக்கப்படவில்லையென ஆடை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

வற் வரி அதிகரிப்பு காரணமாக சில ஆடை வர்த்தகர்கள் தைத்த ஆடைகளின் விலையை உயர்த்தியுள்ளனர்.

எனினும், தமது வர்த்தக நிலையங்களில் வற் வரிக்கு முன்னதாக குறித்த ஆடைகளை கொள்வனவு செய்தமையினால் அவற்றின் விலை உயர்த்தப்படவில்லை என சில வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தைத்த ஆடைகளை அதிக விலைக்கு விற்க வேண்டாம் என ஆடை வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் உட்பட நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 16

கோப்பாய் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுவந்த பெண்ணொருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

27, 45 மற்றும் 46 வயதுகளுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த தலமையில் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

இதன் அடிப்படையில் கோப்பாய் பொலிஸ் பிரிவில், திருநெல்வேலி சந்தையில் செருப்பு தைப்பவர் கசிப்பு வியாபாரத்தில் மறைமுகமாக ஈடுபட்டிருந்தபோது யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர்களை கைது செய்த அதிகாரிகள் அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், அவர் இன்னொரு இடத்தில் தொகையாக வாங்கி வந்து தினமும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் என தெரிய வந்துள்ளது.

அதன்பின்னர் கோப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் உதவியுடன் விற்பனை செய்யும் இடத்தை சுற்றிவளைத்த பொழுது, கோப்பாய் மத்தி சூசியப்பர் கோவிலடியில் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 19லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

(அ)

# ஆடை மாற்றுவதை வீடியோ எடுத்த வைத்தியசாலை ஊழியர் கைதானார்!

கொழும்பு, ஜன. 16

கண்டி தேசிய வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சத்திர சிகிச்சையறைக்குச் செல்வதற்கு முன்னர் கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஆடை அறையில் கைத்தொலைபேசியை பொருத்தியதற்காக வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையின் கண்,காது, மூக்கு சத்திரசிகிச்சை அறையில், சத்திரசிகிச்சையில் பங்குகொள்ளும் பெண் வைத்தியர்கள் ஆடைகளை அணியும் அறையில் இரகசிய இடத்தில், வைத்தியசாலை ஊழியர் ஒருவர் தனது அலைபேசியின் காணொளிப்பதிவை இயக்கி மறைத்துவைத்துள்ளார். மேலும் பெண் டாக்டர்கள் உடை மாற்றுவதை வீடியோ எடுத்து அதனை பார்த்து விட்டு அழித்தமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அறுவைசிகிச்சையில் கலந்துகொள்வதற்காக டாக்டர் ஒருவர் தனது உடைகளை மாற்றிக் கொண்டிருந்த போது, உடைமாற்றும் அறையில் அலைபேசி இருப்பதைக் கண்டு, அதைச் சோதித்துள்ளார். அதில், தான் ஆடை மாற்றுவது வீடியோவாக பதிவாகியுள்ளது. அதைச் சோதித்த போது, மருத்துவர் தனது உடைகளை மாற்றிக் கொண்டிருந்தார்,அதை நீக்கி விட்டு மருத்துவமனை நிர்வாகத்திடம் புகார் அளித்துள்ளார்.

சந்தேகமடைந்த வைத்தியசாலைப் பணியாளரையும் கையடக்கத் தொலைபேசியையும் கண்டி தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததன் பின்னர், சிலகாலமாக அழகிய பெண் வைத்தியர்கள் ஆடைகளை மாற்றும் காட்சிகளை கையடக்கத் தொலைபேசியில் வீடியோ எடுத்து அதனைப் பார்த்து அழித்ததாக பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

எனினும் பொலிஸார் அவரது கைத்தொலைபேசியை சோதனையிட்டபோது, அழகுக்கலைநிபுணர் ஒருவர் ஆடைகளை மாற்றியமை கையடக்கத் தொலைபேசியில் பதிவாகியிருந்ததை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பில் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, வைத்தியர் அழகுக்கலை நிபுணராக இருந்தமையினால், வீடியோவை நீக்கவில்லை என பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

(அ)

# பௌத்தத்தை இழிவுபடுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள்!

## ஜனாதிபதிக்கு மகாநாயக்க தேரர்கள் கடிதம்

கொழும்பு, ஜன. 16

பௌத்த மதத்தை இழிவுபடுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மகாநாயக்க தேரர்கள் கடிதம் மூலம் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

மல்வத்து பீடம், அஸ்கிரிய பீடம், அமரபுர பீடம், ராமஞ்ஞ பீடம் ஆகிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களே இவ்வாறு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

பௌத்த மதத்தை இழிவுப்படுத்தும் வகையிலான கருத்துகளை பரப்பி, பௌத்த தத்துவம் மற்றும் கலாச்சார விழுமியங்களுக்கு தீங்கு விளைவிக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு குறித்த கடிதத்தில் மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையின் மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் பௌத்த மதம் தொடர்பாக தவறான சித்தாந்தங்களைப் பரப்பி, பௌத்த தத்துவத்திற்கும் அதன் கலாச்சார விழுமியங்களுக்கும் தீங்கு விளைவிப்பதாகக் கூறும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறும் பௌத்த மதத்தை அழிக்க முற்படும் இவ்வாறான நபர்களின் செயற்பாடுகளை இனியும் வெறும் சம்பவங்களாகக் கருத முடியாது என்றும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், சமூக ஊடகங்களில் இவ்வாறான கருத்துக்களை பரப்பி பௌத்த சமூகத்தை தவறாக வழிநடத்தி சமூக சீர்கேடுகளை ஏற்படுத்த முயற்சிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை உடனடியாக தயாரிக்க வேண்டும் எனவும் மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

புத்தசாசனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அதனை மேம்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் மகாநாயக்க தேரர்கள் உடனடியாக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக நாட்டில் இடம்பெற்ற பல சம்பவங்களை அடிப்படையாக கொண்டு இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவிடமிருந்து 20 ரயில் இயந்திரங்கள்




கொழும்பு, ஜன. 16

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இலவசமாக வழங்கப்படும் 20 ரயில் இயந்திரங்களில் 02 இயந்திரங்கள எதிர்வரும் 04 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு கொண்டுவரப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த இயந்திரங்கள் இந்நாட்டில் இயங்குவதற்கு ஏற்றவையா என ஆராயவே இவ்வாறு கொண்டுவரப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ரயில் இயந்திரங்களை ஆய்வு செய்வதற்காக இலங்கை ரயில்வே திணைக்களத்தை சேர்ந்த 05 பரிசோதகர்கள் இந்தியாவிற்கு சென்றிருந்தனர்.

நாட்டின் வடக்கு ரயில்வே மார்க்கத்தில் சரக்கு போக்குவரத்திற்கு இந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

## ‘யுக்திய’வால்...

அமைச்சர டிரான் அல்லஸின் ஒப்புதலுடன், “போதைப்பொருள் அச்சுறுத்தலை” கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன் “யுக்திய” என்ற தலைப்பிலான நடவடிக்கையை முன்னெடுத்தார்.

இந்த நடவடிக்கை 2024 ஜனவரி 10, வரை நடந்து வருகிறது, அன்றாடம் குறைந்தது ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் போதைப்பொருள் பாவனை அல்லது பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு எதிராக ஏற்கனவே கடுமையான அடக்குமுறையின் பின்னணியில் இந்த நடவடிக்கை வெளிவருகிறது.

இலங்கை பொலிஸ் துறையுடன், ஆயுதப்படை உறுப்பினர்களும் இந்த நடவடிக்கையை ஆதரித்து வருகின்றனர், இதில் பல மனித உரிமை மீறல்கள் நடந்ததாக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த மீறல்களில் முதன்மையாக ஒதுக்கப்பட்ட சமூக-பொருளாதார சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு எதிரான தன்னிச்சையான கைதுகள் அடங்கும். பிடியாணை அல்லது நியாயமான சந்தேகங்கள் இல்லாமல் நடத்தப்படும் தேடல்கள் மற்றும் பொது இடங்களில் மேற்கொள்ளப்படும் முறைகேடான தேடுதல்கள் மற்றும் கைதுகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன, தனியுரிமைக்கான உரிமை மட்டுமல்ல, ஒரு நபரின் நிரபராதி எனக் கருதப்படும் உரிமையையும் இதன்மூலம் மீறப்படுகிறது.

சட்டத்தரணிகளின் கூற்றுப்படி, கடந்த காலங்களில் போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட அல்லது கட்டாய புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்ட நபர்களிடம் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்படாத போதும் கூட நபர்கள் இதன்பேது கைது செய்யப்படுகிறார்கள்.

பிரதான வாழ்வாதாரத்தில் ஈட்டுபவர்கள் மற்றும் தாய்மார்கள் கைது செய்யப்பட்டமை இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் போது குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் மற்றும் குழந்தைகளின் நல்வாழ்வை மோசமாக பாதித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு, தற்போதுள்ள சிறைச்சாலை நிலைமைகள் மற்றும் கைதிகளை நடத்துவது “மனிதாபிமானமற்றது மற்றும் இழிவானது” என்று கூறியுள்ளது.

2024 ஜனவரி 9 வரை யுக்திய சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 29,000ஐத் தாண்டியுள்ளது. குறைந்தது 1,600 பேர் கட்டாய போதை மறுவாழ்வுக்காக அனுப்பப்பட்டுள்ளனர், பல அடிப்படை உரிமைகளை மீறப்பட்டுள்ளன.

தன்னிச்சையான தடுப்புக்காவல் தொடர்பான ஐ.நா. செயற்குழு 2017 இலங்கை விஜயத்தின் முடிவில் தனது அறிக்கையில், போதைப்பொருள் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றில் இராணுவத்தினரின் ஈடுபாடு குறித்து கவலை தெரிவித்தது.

போதை மருந்து சிகிச்சை, மற்றும் தடுப்புக்காவலில் உள்ளவர்களின் ஆரோக்கியத்தை கண்காணிக்க பயிற்சி பெற்ற நிபுணர்கள் இல்லாததால். மேலும், மருத்துவ மதிப்பீட்டின்றி போதைப்பொருள் மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பப்பட்ட நீதித்துறை செயல்பாட்டில் உள்ள முறைகேடுகளை அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

போதைப்பொருள் கட்டுப்பாட்டுக்கான தண்டனை மற்றும் இராணுவமயமாக்கப்பட்ட அணுகுமுறை அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு முரணானது, தனிநபர் மற்றும் பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதில் பயனற்றது மற்றும் இறுதியில் சமூகங்களைப் பாதுகாப்பானதாக்கத் தவறிவிட்டது.

எனவே இலங்கை அரசாங்கத்திடம்,

- “யுக்திய” நடவடிக்கையை உடனடியாக நிறுத்தி, ஆதாரம் அல்லது நியாயமான சந்தேகம் இல்லாமல் கைது செய்யப்பட்ட நபர்களை விடுவிக்கவும். சட்டப் பிரதிநிதித்துவம் கிடைக்காதவர்களுக்கு சட்ட உதவி வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- போதைப்பொருளைப் பயன்படுத்தியதற்காகஃபோதைக்கு அடிமையாகியதற்காக கைது செய்யப்பட்ட அல்லது கட்டாய போதை மறுவாழ்வுக்கு அனுப்பப்பட்ட நபர்களை உடனடியாக விடுவிக்கவும்.
- மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்க போதைப்பொருள் கட்டுப்பாடு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளில் ஆயுதப்படைகளை ஈடுபடுத்துவதை நிறுத்துங்கள்.
- கட்டாய போதைப்பொருள் மறுவாழ்வு, கட்டாய சிகிச்சை மையங்களை மூடுதல் மற்றும் புனர்வாழ்வுக்கான ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தின் எல்லைக்குள் தற்போது உள்ள மையங்களில் உள்ள நபர்களை விடுவிக்க அனுமதிக்கும் சட்டங்களை இரத்து செய்தல்.
- சுகாதார அமைச்சின் தலைமையின் கீழ் தன்னார்வ, பொது ஒற்றுமை மற்றும் சான்றுகள் அடிப்படையிலான மருந்து சிகிச்சை மற்றும் கவனிப்பை வழங்க போதுமான நிதி ஆதாரங்களை வழங்கவும்.
- சிவில் சமூகம், சமூகங்கள், மனித உரிமைகள் நிபுணர்கள் மற்றும் உலக சுகாதார அமைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் போன்ற ஐ.நா. முகமைகள் தேசிய மருந்து சட்டங்கள் மற்றும் கொள்கைகளை சீர்திருத்துவதில் அர்த்தமுள்ள வகையில் ஈடுபடுத்துங்கள்.
- எந்தவொரு சட்ட அமலாக்க நடவடிக்கையும் உரிய செயல்முறை தரநிலைகள் மற்றும் அரசியலமைப்பு ரீதியாக பாதுகாக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து நடத்தப்படுவதை உறுதிசெய்யவும்

-போன்ற கோரிக்கைகளை குறித்த அமைப்புகள் முன்வைத்துள்ளது. (அ)

## ரணில்...

குறிப்பிடும் கருத்துகள் திரிபுபடுத்தப்படுகின்றன.எமது அரசாங்கம் வரி குறைத்ததால் நெருக்கடிகள் தோற்றம் பெற்றது என குறிப்பிடப்படுகிறது.

தற்போது வரி அதிகரிப்பினால் சமூக கட்டமைப்பில் நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம்.

அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல் நிலையான இலக்கை அடைய முடியாது என்பதை தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளோம்.

கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். பிரிந்து சென்றவர்கள் எம்முடன் தாராளமாக ஒன்றிணையலாம். அரசியலில் நான் யாரையும் எதிரியாக பார்க்கவில்லை.

கேள்வி - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தலைவராக ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப் படுவவதாக குறிப்பிடப்படுகிறது,?

பதில்- அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்.

கேள்வி - உங்களின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

பதில் - நாங்கள் இதுவரை ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானிக்கவில்லை. பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் களமிறங்கலாம், அல்லது களமிறங்காமல் இருக்கலாம்-என்றார். (அ)

# “சம்பந்தன் தரப்பின் ஆதரவு அரசுக்கு தேவையில்லை!”

கொழும்பு, ஜன. 16

சம்பந்தனின் ஆதரவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்குத் தேவையில்லை என்று அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

‘வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் ஜனாதிபதிக்கும், அரசுக்கும் ஆதரவு வழங்கத் தயார்’ - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நிபந்தனைகளை முன்வைத்து அவருக்கும் அரசுக்கும் ஆதரவு வழங்குவது போல் பாசாங்கு செய்து தங்கள் காரியங்களை நிறைவேற்ற சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிக்கின்றனர்.

அவர்களின் வியூகம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிந்த விடயம். எனவே, சம்பந்தனின் ஆதரவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோ ரணில் அரசுக்குத் தேவையில்லை.

அபிவிருத்தியில் அதிகூடிய கவனம் எடுத்துச் செயற்படும் ஜனாதிபதி ரணில், அதற்கான இலக்கை அடையும் தருவாயில் அரசியல் தீர்வுக்கான செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து அதிலும் வெற்றி காண்பார்.

இதற்குத் தமிழ் மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.” - என்றார். (அ)

## அநுரகுமார...

ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் பெரும்பான்மையானவர்கள் பெண்களாக இருப்பதால், பெண் ஒருவருக்கு பிரதமர் பதவியை வழங்குவதே தமது கட்சியின் நோக்கமாகும்.

தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையில் ஈடுபட்டுள்ளதால், தனது சொந்த அரசாங்கமும் அந்த வேலைத்திட்டத்தில் தொடர்ந்தும் இருக்க வேண்டும். நிலைமைகளை இலகுபடுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் மீளாய்வு நடத்தப்படும்.

மேலும், தனது வேலைத்திட்டத்திற்கு துரோகமிழைக்கும் எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி வைக்கப்போவதில்லை -என்றார். (அ)

## நாட்டைக்...

நல்லிணக்க சபையின் அங்கத்தவர்களுக்கான நியமன சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றைய தினம் நீதி அமைச்சர் தலைமையில் நாகவிகாரையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மும்மத தலைவர்களுக்கும் நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (அ)

## அற்புதமான...

சுகாதாரம், அறிவியல், வணிகம், பொது சேவை ஆகியவற்றில் நீங்கள் செய்யும் அற்புதமான பங்களிப்பிற்காக பிரித்தானிய வாழ் தமிழர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்” என்று நேற்று காலை வெளியிட்ட காணொளிச் செய்தியில் கூறியுள்ளார்.

“நாங்கள் முன்னோக்கிப் பார்க்கும் போது, அனைவருக்கும் சிறந்த, பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான எனது உறுதிப்பாட்டை புதுப்பிக்கிறேன்.” எனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தைப் பொங்கலை முன்னிட்டு எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள பிரித்தானிய அரசியல்வாதிகள் வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## டிரான் அலஸ்க்கு...

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினருக்கு எதிராக ஆறுமாத கால திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகத்தின் பணத்தை நம்பியிருக்கும் நாசகாரர்களே இந்த நடவடிக்கைக்கு தடையாக உள்ளனர்.

இவர்கள் சர்வதேச சமூகத்திற்கு அனுப்பிய மனுக்களின் பிரகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பின் உயர் அதிகாரிகள் இந்த விசேட நடவடிக்கைக்கு எதிராக அறிக்கைகளை வெளியிடுகின்றனர்.

என்ன தடைகள் வந்தாலும் மேற்கண்ட பணியை கைவிடப்போவதில்லை என்றும் அமைச்சர் கூறினார். (அ)

## இலங்கையில்...

நாட்டுக்காகவும் தமிழர்கள் ஆற்றும் பங்குக்காக நான் நன்றி கூற விரும்புகிறேன்.

தமிழ் மக்களின் ஆதரவின்றி பிரித்தானியாவின் மிச்சம் மற்றும் மோர்டனுக்கான நாடாளுமன்ற உறுப்பினராக என்னால் சேவையாற்ற முடியாது. இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்களை நாம் அனைவரும் நன்கு அறிந்துள்ளோம்.

அத்துடன், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை கோரி தொடரும் போராட்டத்தையும் நாம் அறிந்துள்ளோம்.

லண்டன் வாழ் தமிழ் மக்களின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் போரில் உயிரிழந்தமை தொடர்பில் கடந்த 2009 ஆம் ஆண்டு நான் அறிந்து கொண்டேன்.

இந்த போர் நிறைவடைந்து, தற்போது பல ஆண்டுகள் கடந்திருந்தாலும், என்ன மாறியிருக்கிறது? இது தொடர்பில் தொடர் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டாலும், இதுவரை எந்தவொரு முன்னேற்றத்தையும் எம்மால் காணமுடியவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் ஒருவர் கூட இதுவரை மீண்டும் கண்டுபிடிக்கப்படவில்லை. அத்துடன், இந்த போர்க்குற்றங்களுக்கு காரணமான எவரும் இதுவரை சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. தண்டிக்கப்படவில்லை.

இலங்கையில் பயங்கரவாத தடை சட்டத்தின் பாவனை நிறுத்தப்பட்டு தமிழ் மக்களுக்கான சுயநிர்ணயம் வழங்கப்படாவிட்டால் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு எதிராக தடைகள் விதிக்கப்படும். -என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# வற் அறவீடு பிரச்னைகள் குறித்து முறையிடலாம்

## இறைவரி திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 16

வற் அறவீட்டில் நிலவும் பிரச்னைகள் குறித்த முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

உரிய முறையின்றி சிலர் வரி வசூலிப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சேபாலிகா சந்திரசேகர கூறினார்.

இது தொடர்பாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பிலான முறைப்பாடுகளை எழுத்து மூலம் சாட்சியங்களுடன் cgir@ird.gov.lk எனும் இணையத்தள முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

அத்துடன், 'ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி திணைக்களம், சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02' என்ற முகவரிக்கு கடிதம் மூலம் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சேபாலிகா சந்திரசேகர தெரிவித்தார். (அ)

# தமிழர்களின் போராட்டத்துக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்போம்!

## பிரிட்டன் எதிர்க்கட்சித் தலைவர்

லண்டன், ஜன. 16

**சுயநிர்ணய உரிமை, உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய வற்றுக்கான தமிழர்களின் போராட்டத்துக்கும் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.**



தைப் பொங்கலை முன்னிட்டு பிரித்தானிய தமிழ் சமூகத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ள அவர், எமது நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார கட்டமைப்புக்கு அவர்கள் ஆற்றிய பல பங்களிப்புகளையும் அவர் நினைவு கூர்ந்துள்ளார்.

கல்வி, மருத்துவம், வணிகம், கலை, இலக்கியம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அவர்களின் பங்களிப்புகள் தமிழ் சமூகத்தையும் நாட்டையும் வலிமையாக்கியுள்ளதாகவும் உலகம் முழுவதிலுமிருந்து வந்துள்ள தமிழ் மாணவர்களின் கடின உழைப்புக்கு அவர் வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் சுயநிர்ணயம், சமாதானம் மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் ஆற்றிய தியாகங்களை நாம் நினைவுகூர வேண்டிய தருணமும் இது என்றும் பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஆதரிப்பதில் இலங்கை அரசாங்கம் இனியும் தாமதிக்காது என்பதை உறுதி செய்ய தொழிற்கட்சி தொடர்ந்து அழுத்தத்தை பிரயோகிக்கும் என்றும் பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இந்திய மீனவர் 10 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 16

பருத்தித்துறை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவோரை தடுக்கும் வகையில் கடற்படையால் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைக்கு வடக்கே மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் இழுவைப் படகும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை மயிலடி கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்படுள்ளது. (அ)

# ரயில் தடம்புரள்வு

கொழும்பு, ஜன. 16

மலையக மார்க்கம் ஊடான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நானு ஓயா - கிரேட் வெஸ்டர்ன் ரயில் நிலையங்களுக்கு இடையில் ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளமையினால் குறித்த மார்க்கமூடான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், தடம் புரண்ட ரயிலை தண்டவாளத்தில் நிமிர்த்தி வைப்பதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 100 நகரங்களை அழகுபடுத்த 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 16

நூறு நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்திற்காக இந்த வருட வரவு செலவு திட்டத்தில் 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த நிதியின் மூலம் 9 திட்டங்களின் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, கம்பஹா, மினுவாங்கொடை, பாணந்துறை, அலவ்வ, ஹொரண மற்றும் அவிசாவளை பொதுச் சந்தைகளின் அபிவிருத்தி, வரக்காபொல மற்றும் முல்லைத்தீவு பேருந்து நிலையங்களின் அபிவிருத்தி, நிந்தவூர் கடற்கரைப் பூங்கா நிர்மாணம் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 - 06 - 1934



இறப்பு 15 - 01 - 2024

## கந்தையா சண்முகநாதன்

### (செல்லமணி)

*(கரம்பொன் முன்னாள் கிராம உறுப்பினர்)*

யாழ். கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், கரம்பொன், குளியாப்பிட்டி, ஜேர்மனி Heilbronn ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகநாதன் நேற்று (15-01-2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா – கௌரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா – நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரவதனாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, இரத்தினசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஞ்சிதகுமார்(ஜேர்மனி), மதிவதனி(ஜேர்மனி), மதிராஜினி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி (ஜேர்மனி), யோகநாதன் (ஜேர்மனி), கேதீஸ்வரநாதன் (Thinesh Jewellers & Textiles, London) ஆகியோரின் அன்பு மாமனாரும், பபித்ரா, ஜனோசன், பிரியங்கா, நிரோஜன், நிவேதன், தினேசன், சஞ்சீவன், ஜனகன் ஆகியோரின் அன்புப் பேரனும், கிரிஷானின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2024) புதன்கிழமை நண்பகல் 11 மணிக்கு Hauptfriedhof Heilbronn Wollhausstraße 132, 74074 Heilbronn, Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

**ரஞ்சன் - மகன்**
Mobile : +4915224501541

**வதனி - மகள்**
Mobile : +4917622784575

**ராஜினி - மகள்**
Mobile : +447944448583

தகவல்:
**குடும்பத்தினர்**

# டுபாயில் இருந்து வெளிநாடுகளுக்கு தப்பும் போதைப்பொருள் வியாபாரிகள்

கொழும்பு, ஜன. 16

டுபாய் நாட்டில் தலைமறைவாக இருக்கும் இலங்கையில் போதைப் பொருள் வியாபாரத்தை வழிநடத்தி வரும் முன்னணி போதைப் பொருள் கடத்தல்காரர்களை கைது செய்ய விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் டுபாய் நாட்டை கைவிட்டு ஐரோப்பிய நாடுகள் உட்பட வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல ஆரம்பித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

இந்த போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தம்மை செல்வந்த வர்த்தகர்களாக காட்டிக்கொண்டு, இத்தாலி, இங்கிலாந்து, பிரான்ஸ், ருமேனியா போன்ற நாடுகளுக்கு தப்பிச் செல்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இலகுவாக வீசா பெறக்கூடிய நாடுகள் மற்றும் வெளி நாட்டவர்களை அதிகளவில் பரிசோதனைக்கு உட்படுத்தாத நாடுகளை இவர்கள் தெரிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து டுபாய் அரசு, அந்நாட்டு பொலிஸார் மற்றும் சர்வதேச பொலிஸாருடன் பேச்சுவார்த்தை நடத்தி, இந்த போதைப் பொருள் கடத்தல்காரர்களை கைது செய்து, இலங்கைக்கு கொண்டு வரும் விசேட வேலைத்திட்டம் தற்போது இராஜதந்திர மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை அறிந்துக்கொண்ட பின்னர், இந்த போதைப் பொருள் கடத்தல்காரர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல ஆரம்பித்துள்ளனர். (அ)

# "ஜனாதிபதித் தேர்தலில் அநுர வெற்றி பதவிப்பிரமாணம் தடுக்கப்படலாம்"

கொழும்பு, ஜன. 16

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் என அனைத்து கருத்துக் கணிப்பு அறிக்கைகளும் உறுதிப்படுத்தியுள்ளதாக அந்த கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டி கரயலித்த பிரதேசத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

மேலும், அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவார் என பல கட்சிகளில் இருப்பவர்கள் அச்சமடைந்துள்ளனர். இதனால், ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்ற சந்தேகமும் உள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிப்பெறும் அநுரகுமார திஸாநாயக்கவை பதவிப்பிரமாணம் செய்ய முடியாதபடி பிரதம நீதியரசரும் கடத்தப்படலாம் என்ற சந்தேகம் உள்ளது.

இதேவேளை, கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணி சமூகத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களை மாத்திரமே கட்சியில் இணைத்து வந்தது. எனினும் சமூகத்திற்கு நன்மை செய்யக்கூடிய அனைவரையும் தேசிய மக்கள் சக்தியில் இணைத்து வருகின்றோம்- என்றார். (அ)

# "2015இல் மகிந்த ஜனாதிபதியாகியிருந்தால் நாடு இதைவிட பாதாளத்துக்கு சென்றிருக்கும்"

கொழும்பு, ஜன. 16

2015ஆம் ஆண்டு தான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்காவிடின் நாடு இன்று இருப்பதை விட மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தெஹிவளையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"2015ஆம் ஆண்டு எனது வெற்றியின் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலகின் பலம் வாய்ந்த நாடுகளின் ஆதரவை மீண்டும் பெற முடிந்தது.

ஊழல், மோசடி, திருட்டு, வீண் விரயம் மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை நிரப்பிக்கொண்டு நாட்டை பாதாளத்திற்கு கொண்டு சென்ற ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர முடிந்தது. எனது போட்டியாளரான மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தால் நாடு இன்று இருப்பதை விட மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் " என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# ஹிஸ்புல்லா - இஸ்ரேல் தாக்குதல் : லெபனானில் திறக்கப்படும் போர்முனை?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



இஸ்ரேலுக்கும் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்புக்கும் தற்போது மோதல்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கடந்த வாரம் இஸ்ரேல் ராணுவத்தின் ஆளில்லா விமானம் பெய்ரூட் குடியிருப்பு மீது நடத்திய தாக்குதலில், ஹமாஸ் துணை தளபதி சலே அல் அரூரியும் அவரது பாதுகாவலர்கள் 6 பேரும் உயிரிழந்தனர்.

அரூரியை கொன்றவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று லெபனானில் செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்தது. அதன் படி இஸ்ரேலின் மெரோன் விமான கட்டுப்பாட்டு தளம் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

ஏவுகணை தாக்குதலால் விமான ஓடு பாதை சேதம் அடைந்தது என்றும் மெரோன் வான் கட்டுப்பாட்டு தளத்தில் இருந்து இஸ்ரேலிய விமானப்படையால் போர் விமானங்களை இயக்க முடியவில்லை என்றும் தகவல் வெளியாகியது. இந்நிலையில், தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரின் இடங்களின் மீது இஸ்ரேல் விமான படை பல குண்டுகளை வீசியது.

**ஹிஸ்புல்லா தளபதி பலி :**

இந்த குண்டு வீச்சு குறித்து லெபனான் பாதுகாப்பு அதிகாரி கூறுகையில், ஹிஸ்புல்லாவின் உயரடுக்கு பிரிவான ராட்வான் படையின் மூத்த தளபதி ஒருவர் கிர்பெட் செல்ம் என்ற கிராமத்துக்கு காரில் சென்றார். அப்போது இஸ்ரேல் குண்டுவீச்சில் அவர் உயிரிழந்தார் என்றார்.

இஸ்ரேலுக்கு இந்த ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இடையில் பல தாக்குதல்கள் நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக 2006ம் ஆண்டு நடந்த மிகப் பெரிய போருக்கு பிறகு இருதரப்பும் அடிக்கடி மோதிக்கொள்கின்றன.

ஹமாஸுக்கு ஹிஸ்புல்லா அமைப்பு ஆதரவு தெரிவித்திருப்பதனால், இது இந்த மோதலை இன்னும் விரிவான



போராக மாற்ற வழிவகுக்கும் என அஞ்சப்படுகிறது.

ஏனென்றால் ஈரானின் துணையுடன் இயங்கிவரும் ஹிஸ்புல்லா அமைப்பு, கடந்த வாரம் வடக்கு இஸ்ரேலில் சில ஏவுகணைகளை வீசியது. எனினும் இப்போது மிகப் பெரிய போர் ஏற்படாமல் தவிர்க்க ஹிஸ்புல்லா அமைப்பின் தாக்குதல்கள் கட்டுப்படுப்பட்டுள்ளன.

அக்டோபர் 15ம் தேதி இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர், “எங்களுக்கு வடக்கு எல்லையில் போரிடுவதில் விருப்பம் இல்லை. ஹிஸ்புல்லா அவர்களது தாக்குதலை கட்டுப்படுத்தினால் நாங்களும் அப்படியே இருப்போம்” எனக் கூறினார்.

**ஹிஸ்புல்லா உருவாக்கம்:**

ஹிஸ்புல்லா இயக்கத்தின் போராட்ட எண்ணக் கருத்துக்கள் 1960, 70களில் வேர்விட்டு உத்வேகங் கொண்டது. ஆனால் இயக்கமாக ஹிஸ்புல்லா உருவானது 1982களில் தான். அது தெற்கு லெபனானில் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்திய காலகட்டம். அப்போது ஈரானின் ஷியா முஸ்லீம் தலைவர்கள் ஆதரவுடன் தொடங்கப்பட்ட இயக்கம்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சியை பரப்பும் முயற்சியாக ஹிஸ்புல்லா பார்க்கப்பட்டது. உள்நாட்டுப்போர் நடந்துவந்த லெபனானில் இருந்த ஷியா முஸ்லீம்களை சேர்த்துக்கொண்டு வலுவடைந்தது ஹிஸ்புல்லா அமைப்பு.


2000ம் ஆண்டில் லெபனானை ஆக்கிரமிக்கும் முயற்சிகளில் இருந்து இஸ்ரேல் பின்வாங்கிய பிறகு, ஹிஸ்புல்லா அமைப்பு ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டது.

ஆனால் இஸ்ரேல் மூலம் தொடர்ந்து அச்சுறுத்தல் இருப்பதாக கருதிய ஹிஸ்புல்லா தங்களது இராணுவத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தியது. ஒரு மறைமுகமான அமைப்பாக தொடங்கப்பட்டு இன்று லெபனான் அரசில் ஆதிக்கம் செலுத்தும் இடத்துக்கு வந்திருக்கிறது ஹிஸ்புல்லா அமைப்பு.

அமெரிக்கா, இஸ்ரேல், மேற்கத்திய நாடுகள் மற்றும் சில அரபு நாடுகளும் இந்த இயக்கத்தை தீவிரவாத அமைப்பாக கருதுகின்றன.

**ஹிஸ்புல்லாவின் இராணுவம்:**

ஹிஸ்புல்லா இராணுவம் தெற்கு லெபனானில் ஷியா முஸ்லீம்கள் அதிகம் வாழும் பகுதியில் வளர்ந்திருக்கிறது. இந்த பகுதியை இஸ்ரேல் கைப்பற்ற முயன்ற போது பல கொரில்லா போர்களை மேற்கொண்டு 2000ம்






> இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில், லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பும் அடிக்கடி தாக்குதல்களை நடாத்தி வருகிறது. ஹமாஸுக்கு ஆதரவு தரும் லெபனான் ஹிஸ்புல்லா அமைப்பு இந்த மோதலை இன்னும் விரிவான போராக மாற்ற வழிவகுக்கும் என அஞ்சப்படுகிறது.



ஆண்டு இஸ்ரேலை பின்வாங்க செய்தது.

2006ம் ஆண்டு இஸ்ரேலுடன் மீண்டும் போர் ஏற்பட்டபோது தங்களது இராணுவம் முன்னேற்றம் அடைந்துள்ளதை உலகுக்கு வெளிப்படுத்தியது ஹிஸ்புல்லா அமைப்பு. சில இஸ்ரேலிய இராணுவ வீரர்களைக் கொன்று இருவரை கடத்தி வந்தது.

5 வாரம் நீடித்த இந்த மோதலில் ஹிஸ்புல்லா ஆயிரக் கணக்கான ராக்கெட்டுகளை ஏவியது. இதில் லெபனான் மக்களும் பாதிக்கப்பட்டனர். லெபனானில் 1200 பேர் வரைக் கொல்லப்பட்டனர். பெரும்பாலும் பொதுமக்கள். இஸ்ரேல் வீரர்கள் 158 பேர் கொல்லப்பட்டனர்.

**ஈரானின் ஆதரவுடன் ஹிஸ்புல்லா:**

ஈரானின் ஷியா முஸ்லீம்கள் ஆதரவுடன் ஹிஸ்புல்லா செயல்படுகிறது. சிரியாவில் அதிபர் அல்-அசத்துக்கு ஆதரவாக சுன்னி முஸ்லீம்களை எதிர்த்து போரிட்டது இந்த அமைப்பு. இந்த தருணத்தில் ஹிஸ்புல்லா அமைப்பின் இராணுவபலம் பெருகியது.

இந்த அமைப்பிடம் துல்லியமான ராக்கெட்டுகள் மற்றும் ட்ரோன்கள் இருக்கின்றன. இஸ்ரேலின் எந்த ஒரு பகுதியையும் தங்களால் தாக்க முடியும் என்கின்றனர்.

2021ம் ஆண்டு ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் செய்யது ஹசன் நஸ்ரல்லா, அவர்களிடம் 1 லட்சம் வீரர்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

**இஸ்ரேல் ஹமாஸ் போரில் ஹிஸ்புல்லா:**

ஹமாஸும் சரி, ஹிஸ்புல்லாவும் சரி மற்றொரு பாலஸ்தீன அமைப்பான இஸ்லாமிக் ஜிகாத்தும் சரி ஈரானின் துணையுடனே செயல்பட்டு வருகின்றன.




ஈரானிய ஆதரவு குழுக்களுக்கு ஹிஸ்புல்லா பக்கபலமாக இருந்துள்ளது. யேமனில் ஹவுதி படையினருக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா சண்டையிட்டது என சவுதி அரேபியா குற்றம் சாட்டியிருக்கிறது ஆனால் இதனை ஹிஸ்புல்லா மறுத்துள்ளது.

இதுபோலவே ஹமாஸுக்கு ஆதரவாக வடக்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் நோக்கி ஏவுகணைகளை வீசியது ஹிஸ்புல்லா. ஆனால் இஸ்ரேலின் அடுத்தடுத்த எச்சரிக்கைகளைத் தொடர்ந்து தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தாக்குதலில் இருந்து லெபனானைக் காப்பதாக ஹிஸ்புல்லா கூறிக்கொள்கிறது. அங்குள்ள ஷியா மக்களிடம் பிரசித்தி பெற்ற அமைப்பாக திகழ்கிறது.

லெபனான் நாடாளுமன்றத்தில் ஹிஸ்புல்லா சேர்ந்தவர்கள் அமைச்சர்களாகவும் உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர்.

ஆனாலும் அமெரிக்காவையும் அதன் நட்புநாடுகளான அரபு நாடுகளும் இஸ்ரேலும் ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்பாகவே கருதுகின்றனர். மேற்கத்திய நாடுகளின் தூதரகங்கள் மீது ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தியதாக மேற்கத்திய நாடுகள் குற்றம் சுமத்துகின்றன.

# மாறிவரும் சமூக அடுக்கமைவும் மலையக சமூகமும்: சில குறிப்புகள்!



**கலாநிதி இரா. ரமேஷ்**
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

(நேற்றைய தொடர்ச்சி)

மாத்திரமல்ல எண்ணற்ற சிறிய நகரங்களிலும் (கம்பளை, நாவலப்பிட்டி, கடுகண்ணாவ, குளியாப்பிட்டிய) இவர்கள் நகர சுத்திகரிப்பு தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். இவர்களின் எண்ணிக்கை தொடர்பாக சரியான கணக்கெடுப்பு இல்லை. ஆயினும், கண்டி மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் செறிவாகவும் ஏனைய இடங்களில் பரந்தும் வாழ்கின்றார்கள். இவர்கள் இச்சமூகத்தில் இருந்து முற்றாக ஒதுக்கப்பட்டவர்களாகக் காணப்படுவதுடன், மலையக மக்களின் சமூக -பொருளாதார, அரசியல் நிலை, அடையாளம் மற்றும் கலை கலாசாரம் தொடர்பான எந்த கலந்துரையாடல்களிலும், அபிவிருத்தி திட்டங்களிலும் இம்மக்கள் உள்வாங்கப்படுவதில்லை. இம்மக்களின் அடிப்படை பிரச்னைகள் தொடர்பான ஆய்வுகளோ அல்லது தரவுகளோ பெரியளவில் கிடைக்கக்கூடியதாக இல்லை. இவர்களில் பெரும் எண்ணிக்கையிலானோர் தமது அடையாளங்களை கலாசாரத்தினை இழந்து சிங்களவர்களாக முஸ்லிம்களாக மாறிவருவதுடன், மத மாற்றத்திற்கு அதிகம் உள்ளாகின்ற பிரிவினராகக் காணப்படுகின்றனர். இதற்கு வறுமை, இயலாமை, சமூக ஒதுக்கல், அங்கீகாரமின்மை, அதிகார மையங்களுடன் எத்தகைய தொடர்புமின்மை போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இவர்கள் தொடர்ந்தும் கீழ் வர்க்கமாகவும் உழைக்கும் ஏழை தொழிலாளர்களாகவும் கணிக்கப்படுகின்றார்கள். இவர்கள் அனைவரும் இந்திய வம்சாவழி பூர்வீகத்தினைக் கொண்ட மலையகத் தமிழர்கள் ஆவர்.

மேற்கூறிய அடிப்படையிலேயே மலையக சமூகம் இன்று பல்வேறு அடுக்கமைவுக்கு உள்ளாகியுள்ளது. ஒரு தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து இத்தனை பிரிவினர்கள் எழுச்சிப் பெற்றிருப்பது குறிப்பிட்டு கூற வேண்டிய அம்சமாகும். மலையகச் சமூகம் என்பது மேற்கூறிய சகல அடுக்கமைவுகளையும் கொண்டதாகும். அரசாங்கக் கணக்கெடுப்பில் இச்சமூகத்தின் மொத்தத் தொகை எட்டரை லட்சம் என குறிப்பிடுகின்றது. ஆயிரக்கணக்கான மலையகத் தமிழர்கள் இலங்கை தமிழர்களாக பதிவு செய்தமையே இத்தகைய வீழ்ச்சிக்குக் காரணம் என சிலர் வாதிடுகின்றார்கள். அத்துடன், இவ்வீழ்ச்சிக்கு காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் வாழும் மலையக மக்களில் அதிக எண்ணிக்கையினர் தமது அடையாளங்களை முற்றாக இழந்து சிங்களவர்களாக மாறியுள்ளமையும் பங்களிப்பு செய்கின்றது என குறிப்பிடப்படுகின்றது. அது உண்மையும் கூட. சுமார் இதற்கு 30 ஆண்டுகால சிவில் யுத்தம், அதன் தாக்கம், பாதுகாப்பு கெடுபிடிகள் மற்றும் இன வன்முறைகள் என்பன காரணமாகும். போருக்குப் பின்னர் இந்நிலைமை சற்று மாறி இருந்தாலும், மனிதப் பாதுகாப்பு, சமூகப் பொருளாதார அரசியல் உரிமைகள் மிக மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது. தென்னிலங்கை மலையகத் தமிழர்களின் சமூக நிலை மத்திய மற்றும் ஊவா மாகாணத்தில் இருந்து பெரிதும் வேறுப்பட்டது. ஒரு பகுதியினர் கம்பனிகளுக்கு சொந்தமான தோட்டங்களிலும் பிறிதொரு பகுதியினர் தனி நபர்களுக்கு சொந்தமான சிறு உடைமைத் தோட்டங்களில் வார்த்தைகளால் சொல்ல முடியாத அடக்குமுறைக்கு ஆளாகி வருகின்றார்கள். இவர்களின் பிள்ளைகளில் கணிசமானவர்கள் சிங்களப் பாடசாலைக்குச் செல்வதனையும் சிங்களப் பெயர்களைக் கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடியும். இதில் கலப்புத் திருமணமும் அடங்கும். இதற்கு தொழில் வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற காரணங்களை நியாயப்படுத்துகின்றார்கள். இவற்றைவிட முஸ்லிம் பாடசாலைக்குச் செல்லும் போக்கும் இப்பிரதேசங்களில் காணப்படுகின்றது. இது குறித்து பிரத்தியேகமான ஆய்வுகள் அவசியமாகும். காலி மாவட்டத்தில் சுமார் 60மூமானவர்கள் சிங்களமயமாகியிருப்பதனையும் மாத்தறை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அது 25 -30 வீதமாக காணப்படுவதனை அப்பிரதேசங்களில் மேற்கொண்ட மக்கள் சந்திப்பு கூட்டங்கள் ஊடாகவும் ஏனைய மூலங்களில் இருந்தும் அறிய முடிகின்றது.

இதேபோன்றதொரு நிலைமையினை குருணாகல் மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் காண முடியும். இங்கு வாழும் மலையகத் தமிழர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் தமது அடையாளங்களை இழந்து சிங்களமயமாகியுள்ளார்கள். சிங்கள கலாசாரத்தினை தழுவியுள்ளார்கள். மலையக மக்கள் இம்மாவட்டங்களில் சிதைந்து காணப்படுகின்றார்கள். அதற்கு எண்ணிக்கையில் சிறுபான்மையாக வாழ்வது, அரசியல் பிரநிதித்துவமின்மை, சிங்கள கிராமங்களை அண்டி குடியிருப்புக்கள் காணப்படுதல், உளவியல் ரீதியான அச்ச உணர்வு, இனப்பதற்றம் போன்ற பல காரணிகள் செல்வாக்கு செழுத்துகின்றன. போருக்குப் பின்னர் இனப்பதற்றம் குறைவடைந்திருந்தாலும், தமிழ் மக்கள் மத்தியில் பாதுகாப்பற்ற உணர்வு தொடர்வதனை மக்கள் சந்திப்புகளின் ஊடாக அறிய முடிந்தது. களத்தரவுகளின் படி மொனராகலை மற்றும் குருணாகல் மாவட்டங்களில் சுமார் 25 வீதமானவர்கள் சிங்களமயமாகியிருப்பதனை அறிய முடிந்தது. நகர்ப்புறங்களை அண்டி வாழும் மலையக மக்கள் மத்தியில் இப்போக்கு மிகவும் அதிகமாகும். இப்போக்கினை நகரச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மத்தியிலும் அவதானிக்க முடியும். ஆயினும், இன்றைய இளைஞர்கள் மத்தியில் தமிழர் என்ற உணர்வும் மலையக அடையாளம் தொடர்பான வேட்கையும் தைரியமும் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. கடந்த ஆண்டில் தெனியாயவில் கொண்டாடப்பட்ட மலையகம் 200 நிகழ்வு சிறந்த சான்றாதாரமாக அமைந்தது. இப்பிரதேசங்களில் உள்ள சிறிய மற்றும் பெரிய நகரங்களில் வர்த்தகச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு மலையக இளைஞர்கள் முன்வந்துள்ளார்கள். பிறிதொரு விடயம் யாதெனில் இரத்தினபுரி மாவட்டத்தில் போர் முடிந்தப் பின்னரும் இன வன்முறைகள் தொடர்கின்றன, ஆனால், மேற்கூறிய மாவட்டங்களில் அப்படியான சம்பவங்கள் மிக மிகக் குறைவு அல்லது இல்லையென்றே கூற வேண்டும்.



இவற்றுக்கு மேலாக மேற்கூறிய மாவட்டங்களில் வாழும் மக்கள் மலையக அரசியல் அல்லது மரபு ரீதியான தொழிற்சங்க அரசியலில் இருந்து விடுபட்டவர்கள். இவர்கள் தேசிய அரசியலுடன் பிணைக்கப்பட்டுள்ளார்கள். பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு வாக்களிப்பதும், தமது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அவர்களை நாடுவதும், பொருள்சார்ந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்வதும் தொடர்கின்றது. ஆயினும், இம்மக்களின் உரிமை சார்ந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வினைத் தேடுவதற்கோ அல்லது மனிதப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குவதற்கோ இவர்கள் முன்வருவதில்லை. பெரும்பான்மை அரசியல்வாதிகள் இம்மக்களை அனுதாபக் கண்ணோட்டத்தில் நோக்குவதுடன், கட்சி அரசியல் நலன்களை அடைந்துக்கொள்வதற்குப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றார்கள். இதனை இரத்தினபுரி மற்றும் கேகாலையிலும் அவதானிக்க முடியும். தென் மாகாணம், மொனராகலை மற்றும் குருணாகல் மாவட்டங்களில் வாழும் மலையகத் தமிழர்களின் சமூகப் பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் நிலை தொடர்பாக பின்னர் விரிவான கட்டுரையொன்று எழுதப்படும்.

இவற்றுடன், குடித்தொகை வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் பிரிதொரு காரணம் மலையக மாவட்டங்களில் இடம்பெறும் மத மாற்றங்கள் - இது எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் நீண்ட காலத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். எவ்வாறாயினும் சரியான சனத்தொகை கணக்கெடுப்பு ஒன்றினை மேற்கொண்டால் மலையக மக்களின் சனத்தொகை சுமார் 13 லட்சமாக அல்லது அதற்கு சற்று அதிகமாக இருக்கும். இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளைப் பார்க்கும் போது அது மேலும் உறுதி செய்யப்படுகின்றது. இலங்கை குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் 1981 -2011 காலப் பகுதியில் மலையக மக்களின் சனத்தொகையில் 27% இயற்கை வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் போதும் 1,300,000 - 1,350,000 என்ற மதிப்பீடு ஒத்து நிற்பதனை அவதானிக்க முடிகின்றது. பின்வரும் அட்டவணை மலையக சமூகத்தில் சனத்தொகைக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கால அடிப்படையில் எடுத்துக் காட்டுகின்றது.

### முடிவுரை

இக்கட்டுரையில் காட்டப்பட்டுள்ள பிரிவினர்கள் அல்லது அடுக்கமைவு தொடர்பாக ஆழமான விவாதங்கள் மற்றும் ஆய்வுகள் அவசியமாகும். அவை சமூகத்தின் வளர்ச்சிப்போக்கு மற்றும் பின்னடைவுகள் என்பவற்றினை விளங்கிக் கொள்ளவும் எதிர்காலம் தொடர்பாக சிந்திக்க, கொள்கைத் திட்டங்களை உருவாக்கவும் உதவும். அந்த வகையில், மலையக சமூகத்தின் அபிவிருத்திக்கு அல்லது நிலைமாற்றத்திற்கு எத்தகைய சமூக மாற்றம் தேவை என்பதனை விளங்கிக் கொள்ள இக்கட்டுரை உதவும். இக்கட்டுரை சரியான வகைப்பாட்டினை அல்லது சமூக அடுக்கமைவினை குறித்து சிந்திப்பதற்கான ஆரம்பத்தினை மாத்திரமே வழங்குவதுடன் இது குறித்த விமர்சனம் மற்றும் விவாதங்களுக்கான கதவினை திறந்துவிட முற்படுகின்றது. மலையக சமூகத்தின் அடையாளம் தொடர்பாக மிக தீவிர கருத்தாடல்கள் இடம்பெறும் இச்சூழலில் இத்தகைய விவாதங்களும் அவசியமாகும். இக்கட்டுரையில் 1971 தொடக்கம் 1984 வரையில் தாயகம் திரும்பிய சுமார் 450,000 பேர் தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை. இவர்களும் இச்சமூகத்தின் ஒரு பகுதியினர் - இன்று தமிழ் நாட்டில் பெரும் எண்ணிக்கையிலும் வேறு மாநிலங்களில் ஒரு சிறு எண்ணிக்கையிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் தற்போதைய சமூகப்பொருளாதார நிலை தொடர்பாக ஆய்வுகள் எதுவும் இடம்பெற்றதாக தெரியவில்லை. இலங்கை மலையகத் தமிழர்களின் சமூகப் பொருளாதார நிலையினை தாயகம் திரும்பிய சமூகத்துடன் ஒப்பிட்டு ஓர் ஆய்வு செய்யப்படுமாக இருந்தால் அது இவ்விரு சமூகங்களிலும் ஏற்பட்டுள்ள சமூக அசைவியக்கத்தினை புரிந்துக்கொள்வதற்கும் எதிர்காலவியல் நோக்கில் கொள்கைத் திட்டங்களை முன்மொழிய மற்றும் அது குறித்த பரப்புரைகளைக் கொள்கை வகுப்பாளர்கள் அல்லது அரசாங்க மட்டங்களில் இவ்விருச் சமூகமும் மேற்கொள்ள உதவும்.

சமூக அடுக்கமைவு தொடர்பாக இரண்டு பிரதான கோட்பாட்டு நோக்குகள் காணப்படுகின்றன. முதலாவது செயற்பாட்டு கோட்பாடுகள் அல்லது மரபு ரீதியான கோட்பாடு என்று அழைக்கப்படுகின்றது. இவர்கள் சமூக அடுக்கமைவு தவிர்க்க முடியாதது எனவும் அது பயனுள்ளது எனவும் வாதிடுகின்றார்கள். இரண்டாவது மோதல் கோட்பாடுகள் இது தீவிர மார்க்ஸிய சிந்தனையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது. இவர்கள் சமூக அடுக்கமைவு மற்றும் அதனால் ஏற்படுகின்ற அசமத்துவம் சவாலுக்கு உட்படுத்தக்கூடியது மட்டுமல்ல சவாலுக்கு உட்படுத்த வேண்டும் என வாதிடுகின்றார்கள். இதற்கு மார்க்ஸிய சிந்தனைகள் அடிப்படையாக அமைந்துள்ளன.

இவ்விரண்டு கோட்பாடுகளையும் மலையக சமூகத்தின் அடுக்கமைவினை விளங்கிக் கொள்ள பயன்படுத்த முடியும். ஒரு புறம் சமூக அடுக்கமைவு மலையகத்தில் தவிர்க்க முடியாதது. அதற்கு இச்சமூகத்தின் வரலாற்று காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. மேல்நோக்கிய சமூக அசைவு, பின்னடைவுகள் மற்றும் வளர்ச்சி என பல அம்சங்கள் இடம்பெற்று வருகின்றன. ஆகவே, சமூக அடுக்கமைவு இச்சமூகத்தின் வளர்ச்சியினை மற்றும் பின்னடைவுகளை அடையாளம் காண உதவும். அதில் உள்ள மட்டுப்பாடுகள் அல்லது சவால்களை விளங்கிக் கொள்ள உதவும். மறுபுறமாக தீவிர மார்க்ஸியவாதிகள் குறிப்பிடுவதன் படி இத்தகைய அசமத்துவம், பாகுபாடுகள், அடக்குமுறை, சுரண்டல், அடிமைத்தனம் நிறைந்த சமூக கட்டமைப்பு மலையகத்தில் அதிகளவில் நிலவுவதனை அல்லது நிறுவனமயப்படுத்தப்பட்டிருப்பதனை ஒழிக்க வேண்டும். ஆகவே, இப்போக்கினை தொடர்ச்சியாக சவாலுக்கு உட்படுத்த வேண்டும். அதற்கு போராட்டங்கள், எதிர்ப்புக்கள், மக்கள் அணித்திரட்டல், கல்வியறிவு, உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அரசியல் - பொருளாதார நிலை குறித்த அடிப்படை அறிவு என்பன அவசியமாகும். இவை அதிகாரக் கட்டமைப்பினை அரசியல் மற்றும் வர்த்தக உயர் குழாமினரை எதிர்ப்பதற்கு, தமது உரிமைகளை, இருப்பினை மற்றும் அங்கீகாரத்தினை வென்றெடுப்பதற்கு உதவலாம். ●